REGISTERED AT THE G. P. O. AS A NEWSPAPER. T'Phone: 805


# ஈழகேசரி

தேசிய வார வெளியீடு

தாபகர்: நா. பொன்னையா

மலர் 22 | சுன்னுகம், கர தை உஅ 10-2-52 ஞாயிறு (காந்தி ஆண்டு 83) | இதழ் 30

சாம்பசிவம் அன்ட் கோ.
38 கஸ்தூரியார்வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம்



திறமான கைக்கடிகாரங்கள், சுவர் மணிக்கூடுகள், மேசை, 'பொக்கெற்' கடிகாரங்கள் விற்பனைக்கிருக்கின்றன

N. SAMBASIVAM & Co.,
38, Kasturiyar Road, Grand Bazaar, JAFFNA

● மன்னர் மறைந்த மறுகணமே இளவரசி எலிசபெத் மகாராணியானர். ஆபிரிக்காவில் இருக்கும்போதே இப்படியானவோர் சிம்மாசனம் ஏறும் சம்பவம் பிரிட்டனின் சரித்திரத்தில் முன்னர் ஒருபோதும் நிகழ்ந்ததில்லை:

# ஆழ்ந்த நித்திரையில் அமரனுர்

## முடி மன்னர் ஜோர்ஜ் பெரும் பிரிவு



தாங்கமுடியாத கடுங் குளிர். பற்கள் கிடுகிடு என்று அடித்துக்கொண்டன. மன்னர்பிரான் வெறுந்தலையுடன் லண்டன் விமான நிலையத்தில் நிற்கின்றுர். அங்குள்ள ஜனத்திரளைக் கண்டு இராணியே திகைத்துப்போனுர்.

எலிசபெத் இளவரசியை வழியனுப்பி வைப்பதற்குத்தான் விமானநிலையத்தில் அவ்வளவு ஆரவாரம். இது சென்ற 31-1-52-ல் நடைபெற்ற சம்பவம்.

**அருமை மகளை வழியனுப்பி வாழ்த்திவிட்டு அவளின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்த ஆறும் ஜோர்ஜ் மன்னர் சென்ற புதன்கிழமை காலை ஆழிசூழ் உலகை விட்டுப் பிரிந்துவிட்டார். இது 6-2-52-ல் நடைபெற்ற துக்ககரமான சம்பவம்.**

சாம்ராச்சிய நாடுகளின் சுற்றுப்பிரயாணத்தை எலிசபெத் இளவரசியும் எடின்பரோ கோமகனும் அன்று ஆரம்பித்தபோது ஐந்துமாத காலத்துக்குப்பின்னர் மீண்டும் வீடுதிரும்பும்போது மன்னர்பிரான் தங்களை விமான நிலையத்துக்குவந்து புன்னகையுடன் வரவேற்பாரென்றே நம்பியிருந்திருப்பார்கள். ஆனுல், முடிசார்ந்தமன்னரும்... பிடிசாமபர் ஆவர் என்பதை இன்று சாம்ராச்சிய நாடுகள் அறிந்து கவலையடைகின்றது.

தகப்பனுரின் மரணச் செய்தியைக் கேட்டவுடன் இளவரசி எலிசபெத் அவர்கள் தமது சுற்றுப்பிரயாணத்தை நிறுத்திவிட்டுக் கணவனுடன் வியாழக்கிழமை லண்டன் சென்றடைந்தார்.

மன்னர் மறைந்த மறுகணமே இளவரசி எலிசபெத் மகாராணியானுர். ஆபிரிக்காவில் இருக்கும்போதே இப்படியொருவர் சிம்மாசனம் ஏறும் சம்பவம் பிரிட்டனின் சரித்திரத்தில் முன்னர் ஒருபோதும் நிகழ்ந்ததில்லை. ஜோர்ஜ் மன்னர் சான்டிரிங்ஹாம் மாளிகையில் நித்திரை செய்யும்போதே அமைதியாகக் காலமானுர். அச்சமயம் அவருடைய மகள் எலிசபெத் இளவரசியார் ஆபிரிக்காவிலே தங்கியிருந்து அங்குள்ள மக்களின் அன்பான உபசாரங்களில் லயித்திருந்தார்.

தகப்பனுரின் பிரிவைக் கேட்டவுடன் எலிசபெத் இராணி பொலு பொலு எனக் கண்ணீர் சொரிய அழுதார். கிழக்கு ஆபிரிக்காவிலுள்ள தினப்பத்திரிகை ஒன்றே மன்னர் காலமான செய்தியை முதன்முதலாக அறிவித்தது. பின்னர் பக்கிங்ஹாம் அரண்மனைச்செய்தி அதனை உறுதிசெய்ததுடன் இங்கிலாந்தின் மகாராணியாக இன்றுவிளங்குபவர் எலிசபெத் அவர்களே என்பதையும் தெரிவித்தது.

புதிய இராணி எலிசபெத் ஆறும் ஜோர்ஜ் மன்னரின் மூத்த புதல்வியாவார். ஆண் வாரிசு இல்லாத காரணத்தால் இவர் சிம்மாசனம் ஏறிப் பொன் முடி தரிப்பார். 1901-ம் ஆண்டில் விக்ரோரியா மகாராணி காலமானுர். அதற்குப் பின்னர் இளவரசி எலிசபெத் அவர்களே இராணிப் பட்டத்துக்குரிமையாகும் பாக்கியத்தைப் பெற்றுள்ளார்.

எலிசபெத் இராணியின் பட்டாபிஷேகம் கோடைகாலத்தில் சகல ஆடம்பரங்களுடனும் நடைபெறும். இவர் **இரண்டாவது எலிசபெத் இராணி** என வழங்கப்படுவார்.

ஆறும் ஜோர்ஜ் மன்னர் இப்போது சிலகாலம் நோய்வாய்ப்பட்டிருந்தார். சமீபத்தில் அவருக்குச் சுவாசப்பையில் ஏற்பட்ட வருத்தம் காரணமாகச் சத்திர சிகிச்சை செய்யப்பட்டது. இந்த ஆபத்திலிருந்து தப்பிய மன்னர் இனி நீண்டகாலம் உயிருடன் இருப்பார் என நம்பப்பட்டது. ஆனுல் 56-வது வயதில் அவர் காலமாகிவிட்டார். அல்பேட் ஜோர்ஜ் ப்ரெடரிக் ஆதர்

(தொடர்ச்சி 5-ம் பக்கம் பார்க்க)

# தமிழ் அரசின் மணி ஓசையா?

## கூட்டரசால் தமிழினம் தழைக்குமாம்

யாழ்ப்பாணம் 8-2-52

"கொழும்பிலிருந்து கண்டிக்கு வியாபார நோக்கமாகச் சென்ற ஒரு இலங்கைவாசியைக் கைதுசெய்து, 'இலங்கைவாசி அல்ல' என்று இந்தியாவுக்கு அனுப்பிய இன்றைய அரசாங்கத்தின் கண்களில், ஒவ்வொரு தமிழனும் சந்தேகமான பிரஜைதான்!" என்று சென்ற ஞாயிற்றுக்கிழமை (3-2-52) மாலை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடந்த இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மாபெரும் கூட்டமொன்றிற் குறிப்பிடப்பட்டது.

இராணி அப்புக்காத்து எஸ். ஜே. வி. செல்வநாயகம் எம். பி. அவர்களின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. அ. அமிர்தலிங்கம், பி. ஏ.; திரு. கு. வன்னியசிங்கம், எம். பி.; டொக்டர் செனேட்டர் இ. மு. வி. நாகநாதன் உட்பட வேறும்பலர்பேசினர்.

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் இலட்சியமாகிய மாபெரும் யானை வருகின்றது என்பதன் அறிகுறியா இந்த மணிஓசை என்று அங்கு திரண்டிருந்த தமிழ்மக்கள் பேசிக்கொண்டனர்!

அன்று பேசிய பொருள்களின் சாரத்திரட்டு வருமாறு:


சென்ற யுத்தத்திலே இலங்கை செய்தஉதவியின் பயனுக, இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்தது. ஆனுல் இலங்கை செய்த உதவியென்ன? போர் வீரரை, ஆகாயப்படையை அல்லது கடற்படையை உதவியதா? இல்லை. அவர்களுக்கு மிகவு அவசியம் தேவையாக இருந்த றப்பர், தேயிலை முதலியவற்றைக் காலத்திற்குக் காலம் கொடுத்த ஒரே ஒரு உதவிதான்! இவற்றையெல்லாம் உற்பத்திசெய்தும் பண்படுத்தியும் கொடுத்தது யார்? பெரும்பான்மையும் எமது இந்தியத்தொழிலாளர்களே! ஆம், அந்தத் தொழிலாளர்களுக்குத்தான், இன்றைய சுதந்திர இலங்கையில் சுதந்திரமில்லை! வாக்குரிமையில்லை! அவர்கள் செய்த உதவிக்கு இதுதான் பதிலுபகாரம்! இது தான் இலங்கையில் நடைபெறும் ஜனநாயக ஆட்சி!

கடந்த பொதுத் தேர்தலிலே, கொழும்புத்தொகுதி வாக்காளர்களுள் தமிழ்ப்பேசும் மக்களும், சிங்கள மக்களும் சரிசமனுக இருந்தனர். இன்று என்னவென்றுல், நான்கு சிங்களவருக்கு ஒரு தமிழன். நான்கு வருட யூ. என். பி. ஆட்சியிலேயே தமிழனுக்கு இந்நிலையென்றுல், நாற்பது வருடங்களில் என்ன கதியோ?

இப்பொழுது பாராளுமன்றத்திலே இருபத்தாறு தமிழ்ப்பேசும் பிரதிநிதிகள் இருக்கின்றனர். ஆனுல், அவர்களுள் எட்டுப்பேர் அடுத்த தேர்தலின்பின் ஒதுக்கப்பட்டுவிடுவார்கள். காரணம், இலங்கை வாழ் இந்தியத்தமிழர்களுக்கு இலங்கையில் வாக்குரிமை இல்லையென்பதே! ஆகவே, இப்பொழுது இருக்கும் இருபத்தாறு தமிழ்ப்பேசும் பிரதிநிதிகளுக்குப்பதில், பதினெட்டுப் பிரதிநிதிகளே இடம்பெறுவர்! இன்றைய அரசாங்கம் தமிழ்ப்பேசும் மக்களுக்குத் தீமைசெய்கின்றதென்பதற்கு இது ஒரு சான்றுகும்.

குடியேற்றத் திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டின் பல பாகங்களிலும் பெருந் தொகையான சிங்கள மக்களைக் கொண்டு சேர்ப்பது எல்லோரும் அறிந்த உண்மை. திரு. வி. குமாரசுவாமி எம். பி. அவர்களின் தொகுதியிலுள்ள ஒரு பாகத்திலே கூட இவ்விபத்து நடந்திருக்கின்றது. இதன் காரணமாகவே தம்பலகமம்

(தொடர்ச்சி 5-ம் பக்கம் பார்க்க)



காலஞ்சென்ற மன்னர்பிரான் தமது இளங் குடும்பத்துடன் குதூகலமாக இருந்த காட்சி

# அந்த விருந்து

வ. அ. இராசரத்தினம்

அந்த வீடே அல்லோல கல்லோலப்பட்டது! சிறுவர்களின் கலகலத்த மொழியிலும், அந்தப் பெண்ணின் கொஞ்சும் மொழியிலும், அவர்கள் அம்மாவின் குசுகுசுப்பிலும், அப்பாவின் கனத்த நிதானமான குரலிலும் ஒரே சொற்றொடர்தான் திரும்பத் திரும்ப அடிபட்டது.

“அவர் வந்துவிட்டார்.”

பையன்கள் அங்கு மிங்குமாகக் குதூகலத்துடன் ஓடித் திரிந்தனர். அறைக்குள்ளே அக்கா வினாடிக்கொருதடவை ஒழுங்காக வாரி விடப்பட்டிருக்கும் தன் நீண்ட கூந்தலைக் கட்டை விரல்களைத் தவிர்ந்த மற்றைய நான்கு விரல்களினாலும் கன்னங் பொருத்தோடு சேர்த்து அமர்த்துவதிலும், சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு கதவிடுக்கின் வழியாக ‘அவரை’ப் பார்ப்பதிலும் கருத்தாயிருந்தான். பொறுப்பு, கவலை என்ற நியதிபற்றுச் சுழலும் அக்கிரக மண்டலத்தைச் சுமந்துகொண்டிருந்த அவள் அப்பா, மேலும் தன் மண்டையைக் கனமாக்கிக்கொண்டு அங்கும் இங்கும் நடைபோட்டுக்கொண்டிருந்தார். அம்மா அடுக்களையிற் புகுந்துகொண்டு மார்கழிமாதத்து மழையில் மூட்ட நனைந்திருந்த ஈர விறகோடு போராடிக் கொண்டிருந்தாள். எல்லார் செயலுக்கும் ஒன்றுதான் காரணம்.

‘அவர் வந்துவிட்டார்.’

அவரை வரவேற்பதற்காகத்தானோ என்னவோ அந்த வீடு முழுவதும் புதிதாக வெள்ளையடிக்கப்பட்டு, படங்கள் எல்லாம் ஒழுங்காக மாட்டப்பட்டுப் பொருள்கள் எல்லாம் அதனதன் இடத்தில் வைக்கப்பட்டிருந்தன. வெள்ளையடிக்கப்பட்ட அந்தச் சுவர்களும், பூசி மினுக்கப்பட்ட வீட்டுத் தளபாடங்களும், கலகலப்பாக இருக்கும் குழந்தைகளும், முகமலர்ச்சியோடு இருக்கும் பெரியோர்களும், எல்லோரும், எல்லாமுமே அவரைப் புன்சிரிப்போடு வரவேற்றன. அடுக்களையிலிருந்து வந்த கம, கம என்ற வாசனை கூட அவரையே வரவேற்றது.

அந்த அவர், அப்படி ஒன்றும் பிரமாதமானவரல்ல. அந்தக் கிராமத்துப் புழுதியிலே பிறந்து, அந்தக் கிராமத்துக் கூடாகச் சுழித்துச் சிரித்தோடும் மகாவலிகங்கையிலே கும்மாளமடித்து, அந்தக் கிராம மக்களின் சுக துக்கங்களினிடையே இருபது வருடங்களாக வாழ்ந்தவர்தான். சந்தர்ப்பம் அவரைக் கொழும்புக்குப் போகவும், காற்சட்டை போடவும் ஆக்கி வைத்துவிட்டால் அதற்கென்ன?

ஐந்து வருடங்களுக்கு முன்னர் அவர் உள்ளூர்ப் பாடசாலையிற் படித்துக்கொண்டிருக்கும்போது அவருக்கும் அவளுக்கும் தொடர்பு ஏற்பட்டிருக்கலாம். அவர் உத்தியோகத்திற்காகக் கொழும்புக்குச் சென்றபோது அவர் பிரிவினால் அவள் கண்ணீர் கூட விட்டிருக்கலாம். அதெல்லாம் அவருக்கும் அவளுக்குந்தான் வெளிச்சம். அன்று அவன் தன்னைத்தானே காதல் என்ற போர்வைக்குள் இழுத்து மூடிக்கொண்டு விஷயத்தை மெல்லவும் மாட்டாமல் விழுங்கவும் மாட்டாமல் திண்டாடினான். அவளின் பெற்றோருக்கு அந்த விஷயம் தெரிந்திருந்தால் அவளுடைய வாழ்க்கை வேறு எப்படியோ போயிருக்கும். ஆனால் இன்று வலைஞனின் கைக்குளிருந்து நழுவி ஓடும் வரால் மீனைப் போல அவ்விஷயம் அவளுக்கு நழுவிக்கொண்டே போகிறது. அவளுக்குமட்டுமா? அக் குடும்பத்தினரின் கையிலேயே சிக்காததாகவல்லவா நழுவுகிறது! ‘அவர் வந்துவிட்டார்’ என்ற அகமகிழ்ச்சியினுங் கூட இந்தக் கவலை அவ்வீட்டிலிழையோடியது.

கொழும்புக்குப் போனபின்னர், இந்த நான்கு வருடங்களையும் முன்னிட்டு அவருக்கு நத்தாருக்காகப் பத்துநாட்கள் விடுமுறை கிடைக்கும். அந்த விடுமுறையில் ஊருக்கு வருவார். அந்தப் பத்து நாட்களில் இரண்டுநாளாவது அவ்வீட்டில் அவருக்கு இராசோபசார விருந்து நடக்கும். அந்த விருந்து ஏன் நடக்கிறது என்பது அவருக்குத் திட்டமாகத் தெரியும்! ஆனால் அதைப் பற்றி அவர் கவலைப்பட்டதில்லை. இந்த நான்கு வருடங்களும் அவர் தங்கள் வீட்டில் விருந்துண்பது என்பது அக்குடும்பத்தினருக்கு ஒரு திருப்தியைக் கொடுத்தது. எல்லாவற்றிற்கும் மேலாக அவளுக்கு ஓர் நம்பிக்கையை—அசைக்கமுடியாத நம்பிக்கையைக்—கொடுத்தது. நாலு வருடங்களாக இந்த நிலை நீடித்தால் அவளுக்கு ஏன் நம்பிக்கை பிறக்காது?

இன்று, ஐந்தாம் வருடம் கொழும்பிலிருந்து அவர் திரும்பவும் வந்திருக்கிறார். அந்த வீடு எப்போதும் போலவே எதிரொலித்தது. “அவர் வந்துவிட்டார்,” ஆம், அவர் வந்திருக்கிறார்.

அடுக்களையிலிருந்து கிளம்பிய புகையையும் ஊடுருவிக்கொண்டு நாக்கில் நீரூறச் செய்யும் இதமான சமையலின் மணம் வந்துகொண்டிருக்கிறது.

அப்பா அம்மாவோடு இரகசியமாகச் சொல்லிக்கொள்ளுகிறார். “இம்முறை ஓர் திட்ட வட்டமான முடிவைக் கேட்டு எப்படியும் இந்த வருடத்தில்........

இதை அவள்—அதாவது அவரின் அவள்—செவியுற்றபோது, அவளின் மார்பு விம்மிப் புடைத்துத் தணிந்தது. அந்த ஒரு நிமிடத்தில் அவள் மனத்திலுதித்த இன்பக் கனவுகள்......

விருந்து தயாராகிவிட்டது. அதற்கிடையில் அவரைக் கேட்டுவிட வேண்டும். யாரோ அவளுக்கு நெருங்கிய உறவினர் ஒருத்தர், வெளி விறாந்தையில் அவரிடம் அதைத்தான் கேட்டுக்கொண்டிருக்கிறார். உள்ளேயிருந்து அவள் அவ்விருவர்பேச்சையும் ஒட்டுக்

(தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க)

புத்தகங்கள், பத்திரிகைகள், விற்பனையாளர்கள்.
தமிழ்ப்பண்ணை
யாழ்ப்பாணம் இலங்கை.

சகல பயிர்களுக்கு
CCC பசளைகள்

இலங்கையின் பசளை வியாபாரத்தில்
40 வருடகால அனுபவத்தின் பயனாக

நாங்கள்
CCC
கலவைப் பசளைகளை

தரக்கூடியவர்களாக இருக்கிறோம். இவை இலங்கையில் எல்லாப் பாகங்களிலும் எல்லாப் பயிர்களுக்கும் ஏற்கக்கூடியதாக எமது கமத்தொழில் நிபுணர்களால் விஞ்ஞான முறைப்படி தயாரிக்கப்பட்டவை.

இந்தக் கலவைகள் முழுவதும் மிகவும் உயர்தரமானவை; உத்தரவாதத்துடன் பரிசீலனை செய்யப்பட்டு விற்கப்படுகின்றன. இவைகள் தற்கால யந்திரங்கள் மூலம் கலந்து நெரிக்கப்பட்டிருக்கின்றன. எமது கமத்தொழில் நிபுணர்கள் உங்களுக்கு இலவசமாக ஆலோசனை கூறுவார்கள்.

பசளைக்கு ஒழுங்கு செய்யும்போது கொழும்பு கொம்மேர்ஷல்கொம்பனியார் விற்கும் CCC கலவைப் பசளையையே பார்த்து வாங்குங்கள்.

கொழும்பு
கொம்மேர்ஷல்
கொம்பனி,
லிமிற்றெட்.

[பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டு, அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது.]

The
Colombo
Commercial
Company,
LIMITED.

INCORPORATED IN
GREAT BRITAIN
LIABILITY OF MEMBERS Ltd.

தந்தி: COSSACK, தபாற்பெட்டி இல. 33. பேசுந்தந்தி இல. 5351.

[4515]

❋ திருகோணமலையிற் காந்தி சேவா சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற காந்தி அடிகள் ஞாபக விழாவின்போது ஆற்றிய விரிவுரை.

# காந்தீயமே கதிமோட்சம்

கு. அம்பலவாணர்

காந்தியடிகளை, அவர்கள் கொள்கைகளை முற்றாகப் பின்பற்றும பெருமை எனக்குக் கிடையாது. அவர் உலகுக்கு எடுத்துக்காட்டிய தத்துவங்களை ஓரளவிற்கு அறிந்தவனெனில் அது சிறிது பொருந்தும். காந்தியடிகள் போதனைகளை அரசியற் கொள்கைகளைப் பத்திரிகைகளில் விளக்கிவந்த ஒரேயொரு பெருமையை மாத்திரமுடையேன். என்னையொரு காந்தி பக்தன் என்னில் அது சாலவும் பொருந்தும்.

காந்தியடிகள் ஞாபக விழாவுக்குத் தலைமை வகிப்பதால் நாமே பெருமையும் மதிப்பும் அடைகின்றோம். காந்தியடிகளின் பெருமை சிறிதாவது அதனால் உயர்ச்சியடைந்து விடவில்லை. பொன்னாற் பிரயோசனம் அதைப் பெற்றோர்க்குண்டு; பொன் பெற்றோன் தன்னால் பிரயோசனம் பொன்னுக்கேயுண்டு? எனவே, உலகுய்யவந்த இப்பெரிய மகானின் ஞாபகத்தைக் கொண்டாடுவதால் நாம் அடையும் நன்மைகள் அளப்பில. அவர் இடைவிடாது போதித்துவந்த, செய்கையில் காட்டிய, அரிய உண்மைகளை நாங்கள் நன்கு மனதிற் பதித்து அவர்வழி ஒழுக வேண்டுமென்ற வேணவாவே நம்மைத் தூண்டுமன்றோ.

இவ்வித கொண்டாட்டங்கள் இந்தியாவிற் பண்டு தொட்டு நடைபெற்றுவருகின்றன. உலகுய்ய வந்து அவதரித்த மகான்கள் அடைந்த தினங்கள் இன்றும் கொண்டாடப்பட்டு வருவனவாகும். சைவத்தை நாட்டிய குரவர்கள், நாயன்மார்களுக்கு இன்றும் அவர்கள் சிவகதியடைந்த புண்ணிய நட்சத்திரங்களில் குருபூசை விழாக்கள் பல நடத்தப்பட்டு வருகின்றன. இராமகிருஷ்ணர், விவேகானந்தர், தயாநந்தர், குருநாநக், சைதன்னியர், இராமானுஜர் முதலிய மகான்களின் ஞாபகதினங்கள் இன்று விசேஷதிருநாள்களாகும். மகாத்மா காந்தியடிகளும் இந்த அவதார புருடர்கள் வரிசையில் வைத்து எண்ணப்படற்குரியவர்.

காந்தியடிகள் உயர்நிலையையடைதற்கும் செயற்கரும் செயல்கள் செய்து வெற்றியடைந்தமைக்கும் இரு பெருங் காரணங்கள் உள. ஒன்று உண்மை; மற்றையது அஹிம்சை. இவைகளைத் துணையாகக் கொண்டு எத்தனையோ அரிய தொண்டுகள் செய்து முடித்தனர். இந்தியா அரசியற் சுதந்திரத்தைக் கூட்டிவைத்தற்கு இவைகளே காரணமாயின. இவைகள் இரண்டையும் இவர் அத்திபாரமாண கொள்கைகளாகக் கொண்டு செய்து முடித்த அற்புதத்தைக் கண்டு உலகம் இறும்பூதெய்தியது. கீழ் நிலையிலிருந்த இந்தியாவினை, உண்மையெது பொய்யெதுவென்று அறியாது மருண்டு மலைவுற்ற இந்திய மக்களை வழிகாட்டி வெற்றி பெற்ற அவதாரபுருடரன்றோ மகாத்மா காந்தியடிகள்.

இந்திய மக்கட்கு இவரது போதனைகள் வாழ்க்கைமுறைகள் புதியனவன்று. என்றாலும் உண்மையையும் அஹிம்சையையும் மேற்கொண்டு சத்தியாக்கிரகத்தைத் துணையாகக் கொண்டு எதையும் செய்து முடிக்கலாமென்று உதாரணத்தாற் காட்டிவைத்தவர் மகாத்மா காந்தியடிகளே. சுதந்திரங்களைப் பிறப்புரிமைகளைப் பெறுவது மாத்திரம் இவரது நோக்கமன்று; அவைகளைப்பெற அநுட்டிக்கும் வழிகள், மேற்கொள்ளும் சாதனங்கள் என்பன கூடப் பரிசுத்தமாய் இருக்கவேண்டுமென்று இவர் சாதித்து வந்தனர். அடையும் சுதந்திரம் பெரியதன்று; அதையடைய அனுட்டிக்கும் வழியே மிகவும் பிரதானமானதாகும் எனச் சாதித்தார்.

உண்மைக்கு இவர் கொடுத்துவந்த உயர் நிலை இம்மட்டன்று. உண்மையே இறைவன். இறைவனே உண்மையென நம்பித் தொண்டாற்றிவந்தார். எக்காரியத்தைச் செய்யினும் கடவுளுக்கு முதன்மையளித்துத் துதிசெய்தே நடத்துவர். சில தலைவர்கள்போற் சமயம் வேறு அரசியல் வேறு என்று கருதுபவரல்லர். சமயத்தைச் சன்மார்க்க வாழ்வை, அடிப்படையாகக் கொள்ளாத அரசியல் முயற்சிகளாற் பயனில்லையென்பது இவர் துணிபு. உலகத்தில் அநேக தலைவர்கள் தமது வாழ்க்கையை இரண்டாகப் பிரித்து விடுகின்றனர். அந்தரங்கத்தில், அரசியல் வாழ்க்கையில் தமது நோக்கங்களை நிறைவேற்றச் சித்தியடையத், தாம் எந்த உபாயங்களையும் தந்திரங்களையும் அனுட்டிக்கலாம். ஆனால் சமய வழிபாட்டில் தவறாது நடக்கவேண்டுமென்பார். இது மகாத்மாவின் கருத்தல்ல. இருதுறையும் ஒன்றுதான்; இரண்டிலும் ஒரே தன்மையாகவிருக்கவேண்டும். தூய்மையே கையாளப்பட வேண்டும்.

இக்காலத்துத் தலைவர்கள் நாட்டுமக்களின் மனப்பான்மையையறிந்து அவர்கட்கிசைய நடந்து ஏமாற்றி அவர்களின் ஆதரவைப் பெறுகின்றனர். அவர்களின் தலைவராகின்றனர். அவர்களது விருப்பத்துக்கு மாறாகப் போகமாட்டார். ஆனால் மகாத்மா காந்தியடிகள் அத்தன்மையரல்லர். பொதுமக்களைச் சன்மார்க்க வழியில் வைக்கவேண்டுமென்ற ஒரே கொள்கையுடையவர். உண்மைகளை, உயரிய கொள்கைகளை, அவர்கட்கு விளக்கி அவைகளை அவர்கள் ஏற்றுக்கொள்ளச் சொல்வார். அப்படியவர்கள்

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!

இலங்கைச் சரித்திரமும் உலக சரித்திரமும்

★

முதலாம் பாகம்
இலங்கைச் சரித்திரம்
விலை ரூபாய் 3-00

திரு. எஸ். எவ். டி சில்வா அவர்கள்
சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திர (S.S.C.)
வகுப்புக்கென எழுதிய நூலின் தமிழாக்கம்.

★

இரண்டாம் பாகம்
உலக சரித்திரம்
விரைவில் வெளிவரும்.

ஸ்ரீ லங்கா பப்ளிஷிங் கொம்பனி,
111, டாம் வீதி ::: கொழும்பு

[4525—iii]

# குறைகள் தீருமா?

— ப. கா. மா. —

இந்து மாகடல் நித்திலம் போலவே
இன்பம் ஈந்திடும் ஈழநற் தீவகம்
பந்த முற்றத டிமைநி களத்திற்
பட்டு மேபல காலம் உழன்றபின்
தந்த னள்அன்னை வாழ்வுசி றந்திடத்
தாவில் வீரம கார்தமை அன்பினல்
வந்த தேமக்கள் ஆட்சிஓர் பான்மையில்
வாழ நல்வழி 'பூரண ஆட்சியே',

அன்னி யர்எம்மை ஆண்டது போதுமே
அவ்வ வர்கள்தம் மூட்டை முடிச்சுடன்
இன்னும் ஏனிங்கு றைவது விந்தையே
இன்ப துன்பத்தில் ஏனிங்கு பங்கரோ?
விண்ணும் மண்ணுடன் மாதிரம் தாமுமே
வீந்து போகமு ழங்கும் அரசியற்
கண்ணு ளார்பொம்மை போல உழல்வது
காண நாணம்ப யக்குவ தாகுமே.

மேலை நாட்டவர் பட்டங்கள் ஏனிங்கு
வேண்டி வேண்டிஅ டிமைக ளாகவோ?
ஆலை யிற்கரும் பின்கதி போலவே
ஆகு மேயன்றி ஆவது ஒன்றில்லை.
பாலை நச்சிடும் அன்னங்கள் போலவே
பல்வி தத்திலும் *மேலவர் போக்கையே
நாளும் கொள்வது நாணும் தகையதே
நண்ணு மோநல்ல வாழ்வுந மக்கரோ!

அன்னை பாரத மக்கள் இலங்கையில்
ஆகும் வாழ்வை நடத்தவந் தாலுமே
அன்ன வர்தம்மை ஈழக்கு டிகளாய்
ஆக்க வேபல சட்டமும் முட்டும்ஏன்?
நன்ன லம்விஞ்ச நாடுசி றந்திடும்
யாவ ரும்சமம் தேசம்பொ துமையே
இன்னும் குள்ளநி னைவுகள் உள்ளதேல்
இன்ன லேஉள ஈழம்ச கிப்பளோ?

கெட்ட நாட்டினர் கேதீச் சரம்முதல்
கேடி லாதளம் சைவத்த லங்களை
மட்டம் ஆக்கினர் சைவம்ம றைந்ததோ
மாபணி அவை கட்டிமு டிப்பதே.
இட்ட மாகஅ ரசும்ப ணியினில்
ஏற்கு மோபங்கு இன்பமு டன்இன்னும்
நட்ட மானப லியும்ம துவுமே
நாளெ தோபோக நல்வழி சொல்லவே.

* மேலைத்தேசத்தினர்

## சென்னை தமிழ் எழுத்தாளர் சங்கம்

தமிழ் எழுத்தாளர்களின் தொழில் அபிவிருத்தியடைவதற்காகவும் அவர்தம் நலவுரிமையைப் பாதுகாப்பதற்காகவும் சென்னைத் தமிழ் எழுத்தாளர்சங்கம் 1946-ல் நிறுவப்பட்டது. சிறிது காலமாகப் பணியாற்றாத இச்சங்கம் மீண்டும் 1950-ல் ஸ்ரீ ரா. நாராயணன் அவர்கள் தலைமையிற் கூடிப் புதிய உத்தியோகஸ்தர்களைத் தெரிவு செய்தது. இன்று இச்சங்கத்தின் தலைவராகக் கல்கி ஆசிரியர் ஸ்ரீ ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் விளங்குகின்றார்கள். பொதுக் காரியதரிசியாக ஸ்ரீ பி. கோதண்டராமன் அவர்களும், துணைக் காரியதரிசியாக ஸ்ரீ தொ. மு. சிதம்பர ரகுநாதன் அவர்களும் பணியாற்றுகின்றனர். பத்திரிகை ஆசிரியர்களும், சுயேச்சை எழுத்தாளர்களுமே இச் சங்கத்தின் உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டு இருக்கின்றனர். அங்கத்தினர் வரிசையைக் கவனிக்கும்போது அதிலும் சுயேச்சை எழுத்தாளர்களே காணப்படுகின்றனர். இச் சங்கம் புதுமைப்பித்தன் குடும்ப உதவிநிதி சம்பந்தமாக உழைத்துவருகின்றது; வ. ரா. அவர்களின் நினைவுக்கூட்டம் உட்பட வேறும் பல முக்கிய சொற்பொழிவுகள் இச் சங்கத்தின் ஆதரவிற் சென்றாண்டு நடைபெற்றிருக்கின்றன. சங்கக் காரியாலயம்; சுதேசமித்திரன் கட்டடம், சென்னை 3.

## காந்தியடிகள் நினைவு

### திருகோணமலை விழா

திருகோணமலை காந்தி சேவா சங்கத்தின் ஆதரவில் சென்ற மாதம் 30உ (30-1-52) புதன்கிழமை மாலை திருகோணமலை இந்துக் கல்லூரியில் காந்தியடிகள் நினைவு விழா சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் திரு. கு. அம்பலவாணர் அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. கூட்டம் திருமதி. அ. மகேஸ்வரி அவர்களின் காந்திய கீதங்களுடன் ஆரம்பித்தது. செல்வி இ. அன்னலட்சுமி, செல்வி கா. மணிமேகலாவதி அன்பர்களின் காந்தி பஜனையும் நடைபெற்றது. தலைவர் தமது முன்னுரையில் காந்தியடிகளின் அரிய போதனைகளையும் வாழ்க்கைத் தத்துவங்களையும் விரித்து விளக்கினர். இந்தியா மாத்திரமன்றி உலகமே உய்வதற்குக் காந்தியமன்றிக் கைகண்ட மருந்து வேறில்லையென்பதையும் குறிப்பிட்

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)



ஈழகேசரி

சுன்னுகம், கரஞு தை. உஅ
— காந்தி ஆண்டு 83 —
பேசுந் தந்தி இல. 8 5

## சுதந்திரத் திருநாள்

இலங்கை சுதந்திரம் பெற்று நான்கு வருடங்கள் முடிந்து, இப்போது ஐந்தாவது வருடம் ஆரம்பித்துளது. நமது நாடு பல துறைகளிலும் முன்னேற்றமடையவேண்டியிருக்கிறது. அரசினர் இவ் விஷயத்திற் பராமுகமாயிருக்கவில்லை. உணவுப் பொருள்களை விருத்திசெய்ய, சமுதாய வாழ்வினை உறுதிப்படுத்த, பொருளாதாரத்தைச் சீர்ப்படுத்தப் பல வழியிலும் அரசினர் முயற்சி செய்து வருகின்றனர். நாட்டிலிருந்து வறுமையை முற்றுக ஓட்டி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தினுற்றுன் உண்மையான சுதந்திரத்தை நாம் அடைந்தவராவோம். பன்னூற்றுண்டுகளாகப் பராமுகமாக விடப்பட்டுக் கீழ்நிலையிலிருந்த நம் நாட்டினைச் சடுதியில் இந்திரலோகமாக்கி விடுவது இயலாதென்பதை நாம் அறிவோம். என்றுலும் அரசினர் நிதானமாக உண்மை வழி நின்று அரசியலை நடாத்திச் சென்றுல், எவ்வித தட்டுப்பாடும் குறையும் வரக் காரணமில்லை.

மக்கள் தாம் நினைத்ததைப் பேச எழுத மாத்திரம் சுதந்திரம் பெற்றுவிட்டால் நாடு சுதந்திரத்தை முற்றுக அடைந்துவிட்டதென்பது கருத்தல்ல. தமக்கு வேண்டிய பொருள்களைத் தம் நாட்டிலேயே பெற்று, எவ்வித கிலேசமும் அச்சமுமின்றி மனத் திருப்தியுடன் சமாதானமாக வாழ வசதியும் இடமும் பெறின் அப்போதுதான் உண்மையான சுதந்திரத்தை ஒரு நாடு பெறுகின்றது. அக்காலம் என்று வருமோ தெரியவில்லை. அரசினர் அதை இலக்காகக் கொண்டு அரசியலை இனிது நடத்திச் செல்வாராக. உண்மையகன சுதந்திரநிலையை நம் நாடு அடைய அரசினர்மாத்திரம் முயன்று வருவது போதாது. பொது மக்களும் அரசியலை நடத்துவோரும் தங்கள் கடமைகளை நிதானந் தவருது கைக்கொண்டு வரவேண்டும். அரசியலில் ஊழல்கள், அக்கிரமங்கள், அநீதிகள் ஏற்படாது பாதுகாக்க யாவரும் ஊக்கத்துடன் எத்தனிக்க வேண்டும், யாவரும் ஒத்துழைத்து இயன்ற தொண்டும் தியாகமுஞ் செய்தாற்றுன் நமது நாடு உலகிற் பெரிய நிலையை அடைந்து மற்றைய நாடுகளுடன் சரி சமமாகத் தலைநிமிர்ந்துநிற்கவியலும். அத்துடன் அரசாங்க அதிகாரத்தை நடத்துங் கட்சியினர் எல்லா வகுப்பினரையும், சாதியினரையும், மதத்தினரையும் எவ்வித பிரிவும் பேதமுமின்றிச் சமமாக நடத்தி வருவது மிகப் பிரதானம். உத்தியோகங்கள், உரிமைகள், சலுகைகள் என்பன வழங்குங்கால் வகுப்புத் துவேஷம், வேற்றுமை என்பன காட்டாது யாவரையும் இலங்கை மக்களெனக் கருதி நடாத்திவரின், இலங்கையின் முன்னேற்றம் மிகத் துரிதமடையுமென்பதில் ஐயமின்று. இப்போது இலங்கையரசாங்கம் பெரும்பான்மை மக்களாகும் சிங்களர் கையில் இருக்கின்றது. சிறுபான்மை வகுப்பினர்க்குப் போதிய சலாக்கியங்கள் உரிமைகள் வழங்கப்படவில்லை. தமது சாதியினரின் ஒரே நன்மையில் மாத்திரம் அக்கறையுடையர் என்ற முறைப்பாடுகள் அரசாங்கத்தின்மீது இடைவிடாது சுமத்தப்படுகின்றது. இவ்விதமான குறைகட்கு அரசினர் இடங்கொடுப்பின் நம் நாடு சுதந்திரத்தைப் பெற்றதனுலாய பெரும்பேற்றை நாம் விரைந்து அடையாதிருக்க நேராதா? ஒரு நாட்டின் முன்னேற்றம் அங்கு வாழும் மக்களின் பூரண திருப்தியில் மாத்திரம் தங்கியுள்ளதென்பதை அரசினர் உணர்வாராக. சிறுபான்மை வகுப்பினரை அசட்டை செய்து, அவர்களைத் துயரில் மூழ்கவிட்டு, அரசாங்க அதிகாரத்தைப்பெற்ற கட்சியினர் முன்னேறுவதென்பது இயலாத விஷயம்.

இலங்கை மற்றைய நாடுகளுடன் ஒற்றுமையும் இணக்கமும் அடைந்து அவைகளின் உதவிகளையும் இடைவிடாது பெற்றுவந்தாற்றுன் பலதுறையிலும் விரும்பியபடி முன்னேற்றமடைய வசதியுண்டு. தென்கிழக்கு ஆசியநாடுகள் ஒன்றற்கொன்று பரஸ்பரம் நட்பும் உதவியும் தாராளமாக வழங்கி ஒரு குடும்பம்போல் வாழ்வதும் அவசியம். இலங்கைத்தேசம் இந்தியாவுடன் நெருங்கிய தொடர்புடையது. சுதந்திரம்பெற்ற இந்தியாவின் நட்பை இலங்கை அரசினர் பெரிதாக மதிப்பதாகக் காணேம். எட்டத்திலுள்ள மேலைத்தேச நாடுகளையும் பாகிஸ்தானையும் வலிந்து நட்புப்பாராட்டும் இலங்கையரசினர், எதற்காக இந்தியாவின் தொடர்பினை வன்மையடையச்செய்யாது பராமுகஞ்செய்துவருகின்றனரோ எமக்குத் தெரியவில்லை. இந்தியாவின் தொடர்பினை முற்றுக நீக்குவது என்றுங் கூடியகாரியமன்று. ஆகவே இலங்கையரசினர் இந்தியாவுடன் ஒற்றுமையடைந்து அந்நாட்டின் தொடர்பினை வன்மையடையச் செய்வது அவசியமாகும். அப்போதுதான் பெற்ற சுதந்திரத்துக்கும் ஆபத்து வராது. பொருளாதாரநிலை உறுதியடைந்து மக்கள் திருப்தியுடன் வாழுங் காலமும் வந்தெய்தும்.

## மன்னரின் பிரிவு

இராத்திராப் பிரகாரம் சடுதியாக, யாவரும் வியாகுலமடையப் பிரிட்டிஷ் அரசர்பெருமானுகும் ஆரூவது ஜோர்ஜ் மன்னர் சென்ற புதன்கிழமை மாலை உயிர் நீங்கப்பெற்றனர். பெரிய வைபவங்களோடுகூடிய இந்த அரிய சந்தர்ப்பத்தில் இவ்விதமான கோர சம்பவம் வந்தெய்துமென எவரும் நம்பியதில்லை. இராசகுமாரியும் கோமகனும் இலங்கையை நோக்கிக் கப்பலேறும் தறுவாயில், இக்கொடிய புதினத்தைக் கேட்டு அளப்பருந் துயரத்தில் ஆழ்ந்தனர்; அவர்கள் பிரயாணமும் தடைப்பட்டது. அரசாங்கத்தை ஏற்கவேண்டியதால் இருவரும் வந்தவழியை நோக்கி மறுபடியும் இங்கிலாந்து சென்றுவிட்டனர். கொழும்புத் திட்டத்தின்படி நடத்தப்படவிருக்கும் பொருட்காட்சி, இராசகுமாரியால் பெரியவிமரிசையானவைபவங்கட்கிடையிலே திறந்து வைக்கப்படாது போனது கவலை தரும் விஷயமாகும். யாவரும் எதிர்பார்த்தபடி பொருட்காட்சிவைபவம் அடையவிருந்த உச்சமானநிலை சிறிது வீழ்ச்சியடைந்ததாயினும் அது நடந்தே தீரவேண்டியதுதான். இலங்கைநாடு சுதந்திரத்தைப் பெற்று, அரசியலை நினைத்தபடி நடத்தும் உரிமையை முற்றுகப் பெற்றுளதாயினும், பிரிட்டிஷாரின் தொடர்பினை அடியோடு நீக்கிவிடவில்லை. இன்னும் பிரிட்டிஷ் அரசரையே நாம் எதற்கும் முதல்வராகக்கொண்டு வாழ்கின்றேம். எனவே அவரின் பிரிவு இலங்கைமக்களுக்குத் துயரைவிளைக்குமென்பதில் ஐயமின்று. இலங்கைக்கு விஜயஞ்செய்யவிருந்த எலிஸபெத இராஜகுமாரியாரே இனிப் பிரிட்டனின தலைவராய் இங்கிலாந்தின் கிரீடத்துக்கும், சிங்காசனத்துக்கும உரிமையுடையராகினுர். அவருடைய ஆட்சி பலவகைததான சிறப்புக்களைப் பெற்று உலக சமாதானத்தையும்பெற இறைவனின அனுக்கிரகம கிடைப்பதாக. ஜோர்ஜ் மன்னரின ஆதமா சாந்தியடைவதாக.

## ஏதோ ஊரில் — பாட்டைசாரி

இலங்கையிலுள்ள டாக்குத்தர்மாருக்கு வைத்தியஞ் செய்வதுதான் ஒரேயொரு தொழில் என எங்களில் அநேகர் இவ்வளவு காலமாக எண்ணியிருந்தோம். இப்போது என்னவென்றுல், இவர்க்கு வேறு பல வேலைகளும் இருப்பதாகத் தெரிகின்றது. காலிப் பிரதிநிதி தோழர் தஹநாயகாவே இதனை அம்பலப்படுத்தியிருக்கின்றுர். இலங்கையிற் போதியளவு டாக்குத்தர்மார் இல்லையென்ற புகார் கிளம்பியுள்ள இக்காலத்தில், அரசாங்கம் டாக்குத்தர்மாரைக் கொண்டு வேறுமொரு தொழிலைச் செய்விக்கின்றதெனத் தோழர் தஹநாயகா சென்றவாரம் கூறியிருந்தார். வைத்தியப் பகுதிப் பெரிய கந்தோரில் ஒரு டசினுக்கு மேற்பட்ட ஒரு சில டாக்குத்தர்மார் குசாலாக இருந்துகொண்டு இடமாற்றம் வேண்டி அங்கு செல்லும் மருத்துவ அம்மாக்களையும் வைத்தியத்தாதிகளையும் ஆனந்தப்படுத்திவருகின்றனராம். "அந்தப் பெரிய டாக்குத்தர்மார்மாத்திரமல்ல, உள்ளூர்களில் வேலைபார்ப்பவர்களும் ஒருசிலர் தங்களோடு வேலைபார்க்கும் மாதுசிரோமணிகளை மகிழ்விப்பதும் தங்கள் கடமைகளில் ஒன்றெனக் கருதிப் பணியாற்றி வருகின்றனர்" எனப் பாட்டைசாரி அபிமானி ஒருவர் எழுதியிருக்கின்றுர்.

### அபாயம் யாருக்கு?

ஹுனுவில்ல என்ற கிராமத்தில் யூ. என். பி கட்சியின் கூட்டமொன்று சமீபத்தில் ஏகதடபுடலாக நடைபெற்றுள்ளது. அங்கு பேசிய ஒருவர் கொம்யூனிஸ்ட் கட்சி, சமசமாசக் கட்சி போன்ற கட்சிகள் ஆட்சியைக் கைப்பற்றினுல் நாடு குட்டிச் சுவராகிவிடுமென எச்சரிக்கை செய்து, அக்கட்சிகளைப்பற்றி ஜாக்கிரதையாக இருக்குமாறு அங்கு கூடிநின்றவர்களுக்குக் கூறியிருக்கின்றுர். இப்படிக் கூழுக்குப்பாடும் ஒருகும்பல் இந்த நாட்டில் இருப்பதாற்றுன் ஆபத்து அதிகரித்து வருகின்றதென்பதை அவர் உணர்ந்துகொள்வாராக. தாங்களே ஜனநாயக சிலர்கள், ஏனையோர்செல்லும் பாதைகளிற் புல்லும் முளையாதெனக் கொக்கரித்துக் குட்டிக்கரணம்போடும் இப்பேர்வழிகள்தாம் இன்று நாட்டின் அமைதியைக் குலைத்து வருகின்றனர்.

### நேருஜி பக்தர்கள்

பிரதமர் நேருவின் தேர்தல் முடிவை அறிவதற்கு இங்குள்ளவர்கள் காட்டும் ஆர்வம் சொல்லுந்தரமன்று. ஏதோ தங்களின் சொந்த விஷயம்போற் கருதி அவர்கள் ஆரவாரப்படுகின்றனர். மக்களின் உள்ளங்களில் எல்லாம் நேருஜி கோயில்கொண்டிருக்கின்றுர் என்பதையே இந்த ஆவல் உணர்த்துகின்றது. நேருவின் தேர்தல் தொகுதி அலகபாத்தாகும். அங்குள்ள வாக்காளரின் தொகையிலும் பார்க்க அவருடைய தேர்தல் முடிவை அறிவதற்கு ஆர்வம் உள்ளவர்களின் தொகை கட்டிலடங்காதது. இவருடன் இந்துயோகி ஒருவர் போட்டியிட்டுள்ளார். மௌன விரதம் அனுஷ்டிக்கும் இப்பிரமச்சாரி கூட்டங்களிற் பேசுவதில்லை. அவருடைய கொள்கைகளை ஆதரிப்பவர்களே வெளுத்து வாங்கியிருக்கின்றனர். இந்துச் சட்டத்தை எதிர்த்து இந்த யோகி தேர்தலில் நேருஜியுடன் போட்டியிட்டுள்ளார். பச்சைக் குழந்தைகளே 'நேருமாமா, நேருமாமா' என்று சொல்லிக் குதூகலமடையும்போது மற்றவர்களா அவருக்கு வாக்களிக்காமற் பார்த்துக்கொண்டிருக்கப்போகின்றுர்கள்?

### ஜனதிபதி இருக்கின்றுர்

இளவரசி எலிசபெத் இப்போது இங்கிலாந்தின் இராணியாகிவிட்டார். கொழும்புத்திட்டப் பொருட்காட்சியைத் திறந்துவைக்க இவருக்குக் கொடுத்துவைக்கவில்லை. இந்தியா எங்கள் தாய் நாடு. அது பக்கத்திற்றுன் உள்ளது. பழம் பெரும் நாடாகிய பாரதத்தின் ஜனதிபதியை இலங்கை அழைதுக் கொழும்புப் பொருட்காட்சியைத திறந்துவைத்தால் இலங்கையின் சுயமதிப்பு ஒருபடி ஏறிவிடும். அப்படிச்செய்வாகளா?

— உழையுங்கள் : —
மாதம் ரூ 100/-தொடங்கி 300/-வரை முதலீடின்றி
உழையுங்கள்
விபரங்கள் ;
இனமாக அனுப்பப்படும்
GIRSON KNITTING WORKS, LUDHIANA.
[4529-iv]

## வானிசை

★ வசந்தன் ★

### கொழும்பு வானெலி

நாம் எம்மைப்பற்றிப் புளுகுவது இந்தக்காலத்திலே அவசியம். எம்மைப்பற்றிப் புளுகுவது மற்றவர்களுக்கு ஏதேனும் பயன் கொடுக்கிறதா அல்லது மற்றவர்கள் அந்தப் புளுகை ஏற்கிருர்களா என்பவைகளைப்பற்றிக் கவனிக்க வேண்டியதில்லை. இது சில பத்திரிகைகள் தங்களைப் பற்றிப் புளுகுவதிலிருந்தும் வானெலி நிலயத்தார் தாங்கள் செய்துவரும் நிகழ்ச்சிகளெல்லாம் திறமானவை என்று தம்மைத் தாமே வியந்துகொள்வதிலிருந்தும் தெரிகிறதல்லவா! விவேகச் சக்கரம் நடாத்துபவர்கள் நேரத்தைப் பாழாக்காமல் விஷயத்துடன் நின்றுவிட்டாற் போதுமானது. அனவசியமானதும் பொருத்தமற்றதுமான பேச்சுகளைப் பேசுவது விவேகமாகாது. இப்போட்டிக்கு 15 நிமிஷ நேரம் போதுமானது.

திரு. என். ராஜு அவர்கள் கேதாரத்தில் நன்றாக ஒரு பாடலைப் பாடினர். பைரவி ஆலாபனம் விசேஷமாயமைந்ததுடன் கீர்த்தனமும் புதிய உருப்படியாக விளங்கிற்று.

திரு. சீதாராம் அவர்கள் வீணை வாசித்தார்கள். இவருடைய வீணை வாசிப்பில் நிதானமான முறையைக் காணமுடியவில்லை. சில நேரங்களில் ஆஹா என்று சொல்லவோ என நினைக்கும்படியும், சில நேரங்களில் அதற்கு மாருக நினைக்கும்படியும் தோன்றுகிறது. மீட்டல்கள் வெங்கலப்பாத்திரங்கள் ஒன்றோடொன்று மோதுதல் போல இருந்ததாற் சுகம் கெடுகிறது. இதை இவர் கவனித்து முன்னேற வேண்டும். முதலாவது இவர் 'சிவகாமசுந்தரி' என்ற ஜகன்மோகினிப் பாடல் வாசிப்பார் என அறிவிக்கப்பட்டது. இவர் ஜகன்மோகினி இராக ஆலாபனை செய்து பின்னர் தானமும் வாசித்துக்கொண்டே போனபொழுது சிவகாமசுந்தரியை மறந்து ஜகன்மோகினியில் லயித்து விட்டாரோ என எண்ணும்படியாயிருந்தது. வானெலிக் கச்சேரியின் ஆரம்பத்திலேயே (அதுவும் வாத்தியக்கச்சேரி) இராகதானமாயிருந்தால் கச்சேரி எப்படிக் களைகட்டும்? இதையும் இவர் கவனிக்கவேண்டும். இவருடைய சண்முகப்பிரியா இராகம் நன்றாக அனுபவித்து வாசிக்கப்பட்டது.

### போதன உபகரணக் காட்சி

யாழ்ப்பாணம் கன்னிகாஸ்திரி மடத்தில் 9—2—52 திகதி யன்று காலை 9.30 மணி தொடங்கி, மாதிரிப் பள்ளிக்கூடங்களால், படிப்பிப்பு (போதன) உபகரணக்காட்சியொன்று நடாத்தப்பெறும். வித்தியாதிகாரி காட்சியைத் திறந்து வைப்பார்கள்.

ஆசிரியை தேவை

மாத்தளை அர்ச். அக்னெஸ் அம்மாள் தமிழ்ப் பாடசாலைக்குப் பயிற்றப்பட்ட ஓர் ஆசிரியை தேவை. கத்தோலிக்க ஆசிரியை பெரிதும் விரும்பப்படுவர். விரும்பியோர் மனுச் செய்க.

தலைமையாசிரியை

[4528]

இந்தியா:

# சென்னைக்கு ஒரு பாடம்!

## மந்திரி சபை பதவி துறந்தது

என்றுமில்லாத முறையில் இப்போது நடந்துவரும் தேர்தல் எதிர்பார்த்ததிலும் மிகச் சிறப்பாக ஊழல்கள் அதிகமின்றி நடந்துவருவது பெரிதும் புகழப்படவேண்டிய விஷயம்! இப்படியான தேர்தல் இதற்குமுன் உலகில் எங்கேயாவது நடந்ததில்லை. பதினெட்டுக் கோடி மக்கள் தேர்தலில் பங்குபற்றுவதென்றால் சாமானிய விஷயமா? இத் தெரிவு காரணமாக இந்திய அரசினர்க்கு ஏற்பட்டசெலவு பத்துக்கோடி ரூபா. ஒருவாக்காளருக்கு நாலணை அணுவிகிதம் செலவேற்பட்டதென அரசினராற் கணக்கிடப்படுகின்றது. தேர்தலென்றால் என்ன, வாக்குரிமையென்றால் என்ன என்று இதுவரையும் அறியாத எத்தனையோ சமஸ்தானங்களில் இத் தெரிவை நடத்த வேண்டியதாயிற்று. முதன் முறையாக இவ்வுரிமையை அச் சமஸ்தானங்களில் உள்ள 17 கோடி மக்கட்குப் பழக்குவதென்றால் இலகுவான விஷயமா? என்றாலும் பொதுவாக நோக்குமிடத்து இத் தேர்தல் நன்கு நடைபெற்றுவருகிறதென்றே கூறவேண்டும். எதிர்பார்த்ததிலும் பார்க்கப் பெண்கள் பெருந்தொகையாக முன்வந்து சம்மதங் கொடுத்துள்ளனர்.

### சென்னையில்

சென்னைமாகாணத்திலுள்ள காங்கிரஸ் அடைந்த தோல்வி மிக்க ஆச்சரியமாக இருக்கிறது. இவ்விதமாக வேறு மாகாணங்களில் நடக்கதில்லை. காங்கிரஸ் இயக்கத்துக்குமிக்க சக்தியை அளித்துவந்த சென்னை மாகாணம், இப்போது இப் பரிதாபநிலையை அடையவந்ததிலிருந்து பல விஷயங்கள் அறியக்கூடியதாகின்றன. காங்கிரஸ்கட்சியில் சென்னை மாகாணவாசிகள் தங்கள் நம்பிக்கையை முற்றாக இழந்துவிட்டார்கள் என்றே கூறவேண்டும். சென்னையில்தான் துவருடமாக நடத்தப்பட்டுவந்த காங்கிரஸ் அரசாட்சியில் பல்வேறு ஊழல்கள் தோன்றி மக்களின் நம்பிக்கையைக் கெடுத்துவிட்டன. சென்னை மாகாணத்தில் அறுபதுக்கு மேற்பட்ட கொம்யூனிஸ்ட் பிரதிநிதிகள் பல இடங்களிலும் தெரியப்பட்டனர். வேறு இடங்களில் இப்படியில்லை. கொம்யூனிஸ்ட் கட்சியில் சென்னை மக்கட்கு அவ்வளவு ஆர்வம் ஏற்பட்டுவிட்டதென்பது இதன் முடிவல்ல. காங்கிரஸ் பிரதிநிதிகள்மாட்டுத் தங்கட்குள்ள ஆத்திரத்தை மனவைராத்தைத் தீர்ப்பதற்குப் பொதுமக்கள் கொம்யூனிஸ்ட் அபேட்சகர்கட்கே தமது சம்மதத்தைக் கொடுத்தனர். மக்களுக்குக் காங்கிரஸில் அவ்வளவு ஆத்திரம்போலும். இது காங்கிரஸ்கட்சிக்குச் சரியான பாடமாகும். சென்னை மந்திரி சபை 7-ந் திகதி வியாழனன்று தமது பதவியைத் துறந்து, காங்கிரஸ் மேலிடத்திலிருந்து பதவி நீக்கம் பற்றிய உத்தரவு கிடைத்தமையே இதற்குக் காரணமாகும்.

## ஆழ்ந்த நித்திரையில் அமரனுனர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி

ஜோர்ஜ் 1895-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 18-ந் திகதி பிறந்தார். இவர் ஐந்தாம் ஜோர்ஜ் மன்னரின் இரண்டாவது புதல்வராவார். முதலாவது புதல்வர்தான் வின்ஸர் கோமகனார். மன்னரின்பிரிவைக் கேட்டுத் தாமுந் தமது மனைவியும் திடுக்கிட்டு விட்டதாகவின்ஸர் கோமகனார் விடுத்துள்ள அறிக்கையிற் கண்டிருக்கின்றது.

புதிய மகாராணி செய்த முடிபின்படி பாராளுமன்றத்துக்கு அருகிலுள்ள வெஸ்ட்மினிஸ்டர் திருமண்டபத்திற் காலஞ்சென்ற மன்னரின் பூதவுடல் அரச வைபவத்துடன் வைக்கப்பட்டது. பின்னர் லண்டனுக்கு எடுத்துச் செல்லப்படும்.

அரசரின் அந்தியக்கிரியைகள் 15-2-52 வெள்ளிக்கிழமை நடைபெறும்.

நைரியிலிருந்து லண்டனுக்குத் திரும்பிய புதிய மகாராணி தமது சுற்றுப் பிரயாணம் இப்படித் திடீரென முடிவடையுமென எதிர்பார்த்திருக்கமாட்டார். இளவரசியையும் கோமகனாரையும் வரவேற்று உபசரிப்பதற்கு இலங்கை அரசாங்கம் ஆயிரக்கணக்கிற் பணத்தைச் செலவு செய்தது. யாவும் நன்மையாக நடைபெற்றிருந்தால் இளவரசி எலிசபெத் (இப்போது மகாராணி) கொழும்புத் துறைமுகத்தை 14-2-52-ல் வந்தடைந்திருப்பார். இன்று காலஞ்சென்ற தகப்பனாரின் பூதவுடலின் அருகே கண்ணீருடன் நிற்கின்றார். காலஞ்சென்ற மன்னர் மகளை வழியனுப்பி வைத்தபோது அவரது முகத்திற் குதூகலம் தாண்டவமாடவில்லையெனப் பத்திரிகை நிருபர் ஒருவர் எழுதியிருந்தார். "இனி ஒருபோதும் எனது மகளை நான் காணமுடியாது" என்பதைத் துக்கரேகை படர்ந்த அவருடைய முகம் அன்று உணர்த்தியதோ, என்னவோ? ஆனால் இன்று அது உண்மையாகிவிட்டதே! மன்னர்மறைந்தார். மகாராணி வாழ்க!




## மன்னர் பிரிவால் மக்கள் கவலை

## இலங்கையின் புதிய மகாராணி எலிசபெத்

8-2-52

கொழும்பு வீதிகளில் உள்ள கடைகளுக்கு முன்னால் புதனன்றுமாலை ஒரே ஜனக்கூட்டம். வானொலிகளைச் சுற்றி மக்கள் ஆவலுடன் நின்றனர். மன்னர் பிரான் மரணமானாரென்ற செய்தியைக் கேட்கத்தான் இவ்வளவு ஆவல். புதன்கிழமை மாலை வெளியான ஆங்கிலப் பத்திரிகைகள் சுடச்சுட விலையாகிவிட்டன. மன்னர் பிரானின் மரணச் செய்தியைத் தாங்கி வெளியான விசேஷ பதிப்புகளின் (ஆங்கிலத்தினசரிகள்) பிரதி ஒன்று 50 சதத்துக்குங் கைக்கு எட்டவில்லை.

கொழும்புத் திட்டப்பொருட்காட்சியைத் திறந்து வைப்பதற்காக இலங்கை நோக்கி வந்த காலஞ்சென்ற மன்னரின் புதல்வி அடுத்த நிமிஷமே தென்னாபிரிக்காவிலிருந்து லண்டனுக்குத் திரும்பிவிட்டார்.

### பிரதமர் கவலை

பிரதமர் சேனநாயகா தமது உடல் நிலையைச் சீர்ப்படுத்துவதற்காக வைத்தியசாலையில் தங்கியிருந்தார். அங்கு படுக்கையிலிருந்தபடியே பிரிட்டிஷ் மன்னரின் பிரிவைக் கேட்டு அவர் பெரிதுங் கலங்கினார். வியாழனன்று சகல அரசாங்க காரியாலயங்களும் மன்னரின் பிரிவை முன்னிட்டு மூடப்பட்டன கொடிகள் தாழப்பறக்க விடப்பட்டன.

### இராணி எலிசபெத்

வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு மாட்சிமை தங்கிய எலிசபெத் அவர்களை இலங்கையின் இராணியென ஆங்கிலத்திலும் தமிழிலும் சிங்களத்திலும் பிரகடனம் செய்யப்படும். பிரதிநிதிகள் சபை அங்கத்தினரும் இலங்கையிலுள்ள பிறநாட்டுப் பிரதிநிதிகளும் இவ் வைபவத்திற்கலந்து கொள்வார்கள். வெள்ளிக்கிழமை மாலை இரண்டு மணிக்குப் பிரதிநிதிகள் சபை கூடும்போது பிரதமர் சேனநாயகா அவர்கள் ஒரு பத்திரம் வாசிப்பார்கள்.

### பொருட்காட்சி

கொழும்புத்திட்டப் பொருட்காட்சி சம்பந்தமாக நடைபெற்றுவரும் மாபெரும் வேலைகள் யாவும் ஓய்ந்துவிட்டன. இக் காட்சி பின்போடப்படும் என்பது முடிவாகிவிட்டது. சுதந்திரத்தினம் சென்ற திங்கட்கிழமை கொண்டாடப்பட்டபோது கொழும்புத்துறைமுகம் ஜெகஜோதியாகக் காட்சியளித்தது. இத் தீபாலங்காரங்கள் யாவும் இளவரசி எலிசபெத் (இப்போது இராணி) அவர்களின் வருகையைமுன்னிட்டே ஒழுங்குசெய்யப்பட்டன.

### ஸ்ரீ இலக்குமணன்செட்டியார்

உலகம் சுற்றும் தமிழனை திரு. சோம. லெ. இலக்குமணன்செட்டியார் அவர்கள் சென்னையிலிருந்து விமான மார்க்கமாக வெள்ளிக்கிழமை கொழும்பு வந்தடைகின்றார். இவர் அருமையான பல பிரயாண நூல்களைத் தமிழில் எழுதியுள்ளார். இம்மாதம் 11ந் திகதி ரேயல் கல்லூரியில் விரிவுரையாற்றுவார். மட்டக்களப்பு, திருக்கோணமலை, அனுராதபுரம் போன்ற இடங்களைத் தரிசித்துவிட்டு 22ந் திகதி வரையில் யாழ்ப்பாணம் சென்றடைவார் எனத்தெரிகின்றது. கொழும்பிலே டொக்டர் தியாகராஜா அவர்களினதும் அவர்தம் புதல்வன் திரு. மகேசனினதும் விருந்தினராகத் தங்கியிருப்பார்.

## தமிழ்............ஓசையா?

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்ற ஊரின் பெயரைத் தம்பலகமம் என்று சிங்களப் பெயர்போல மாற்றி அமைக்க அரசாங்கஞ் செய்த ஆயத்தத்தைத் திரு. எஸ். கே. வி. செல்வநாயகம் எம். பி. தலையிட்டுத் தடுத்துவிட்டார்! இப்படியாகத் தமிழ் இனத்திற்கு இன்றைய அரசாங்கஞ் செய்யும் அநீதிகள் பல.

கல்லூரிகளும், தபாற்கந்தோர்களும், வைத்தியசாலைகளும் அமைப்பிப்பதற்காக, அரசாங்கக் கட்சியை ஆதரித்து அதில் சேருவதா? கேவலம்! சில பிரதிநிதிகள் தங்கள் கட்சி என்பதைக் கண்டு ஒரு தொகுதிக்குச் சேவை செய்யும் அரசாங்கம் ஜனநாயக அரசாங்கமா, என்ன? முதலில் நாம் நமது நாடுகளை எமது கையிற் பெறுவோம். பின்பு எது வேண்டுமோ, அவற்றையெல்லாம் சுய மரியாதையுடன் செய்து கொள்வோம்.

எந்த ஒரு நாட்டிலாவது, ஆளுஞ் சாதியை விட ஆளப்படுஞ் சாதி வேறு ஒன்று இருந்தால், இவ்வகையான இன்னல், அநீதி, அக்கிரமம் எல்லாம் நடந்தே தீரும். ஆகையால் தமிழர் தமது சுய மரியாதையுடன் சுதந்திரமாக வாழவேண்டுமாயின் கூட்டரசு அத்தியாவசியமாகும். இப்பொழுது இடதுசாரிக் கட்சியில் இருப்பவர்களுக்கும் ஒரு வார்த்தைகூற விரும்புகிறோம். எமக்கு அரசியற் சுதந்திரம் கிட்டாது இருக்கையில் இடதுசாரி என்ன, வலதுசாரி என்ன? நாம் அனைவரும் முதலில் ஒன்றாகச் சேர்வோம்; எமது இலட்சியமாகிய கூட்டரசினைச் சுதந்திரத் தமிழ்நாட்டைப் பெறுவோம். பின்பு பொருளாதார நிலைபோன்ற விஷயங்களைப்பற்றிக் கவனிப்போம்.


வரப்பெற்றோம்

நந்தனவருஷ கலைமகள் வாக்கிய பஞ்சாங்கம் — 1952-1953 — விலாசம்: கலைமகள் கம்பெனி, 124 செட்டியார்தெரு, கொழும்பு 11; விலை ரூபா 1—00.

இப் பஞ்சாங்கம் திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண பரமாச்சாரிய சுவாமி அவர்களின் அங்கீகாரத்துடன் இட்டமொழி திரு. சிவசூரியநாராயணப்பிள்ளை அவர்களாற் கணிக்கப்பெற்றது. இதிற் கணிதங்களும், பஞ்சாங்கத்துக்குரிய ஏனைய அம்சங்களும் சிறப்பான முறையில் அமைந்துள்ளன. இப்பஞ்சாங்கம் நல்ல தாளில் அழகாகப் பதிக்கப்பட்டுள்ளது. கலைமகளின் மூவர்ணப்படம் முகப்பிற் பொலிந்து விளங்குகின்றது.



கட்டுரைப் போட்டி

முடிவு திகதி 15-2-52

விபரங்களுக்கு 3-2-52 ஈழகேசரி இதழைப் பார்க்கவும்


### திருத்தம்

சென்ற ஈழகேசரி 3-2-52 இதழில் வட இலங்கைச் சங்கீத சபைப் பரீட்சைப் பேறு 4-ம் பகுதி, 2-ம் பிரிவில், 23. சரோஜினி துரைரத்தினம் 'வாய்ப்பாட்டு (& வயலின் சாதாரண சித்தி)' என்றிருப்பதை, 'வாய்ப்பாட்டு & வயலின்' எனத் திருத்தியும் 29. சரோஜினி தேவி தனபாலசிங்கம் வாய்ப்பாட்டு(& வயலின் சாதாரண சித்தி' எனச் சேர்த்தும் வாசித்துக்கொள்க.

## வட இலங்கைச் சங்கீத சபை யாழ்ப்பாணம்

### 1951-ம் வருடப் பரீட்சையின் பெறுபேறுகள்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

3-ம் பகுதி (Grade—3)

1-ம் பிரிவு:

O 2. பரமகல்யாணி கந்தையா வாய்ப்பாட்டு & (வயலின்-2-ம் பிரிவு), 3. சந்திரா அரியகுட்டி $ வாய்ப்பாட்டு, 4. சிவானந்தி நல்லைநாதன் வீணை, 6. சிவரூபி சிவராமலிங்கம் வயலின், 8. பத்மனேஸ்வரி முருகேசபிள்ளை வயலின், 17. அன்னப்பிள்ளை நல்லதம்பி வாய்ப்பாட்டு, 28. நகுலாம்பிகை சபாரத்தினம் வாய்ப்பாட்டு, 29. பரமேஸ்வரி இளையதம்பி வாய்ப்பாட்டு, 44. ஞானமணி கந்தையா வாய்ப்பாட்டு, 51. கந்தையா பரராஜசிங்கம் $ * வாய்ப்பாட்டு, 52. செல்வநாயகி கந்தையா $ வாய்ப்பாட்டு & வயலின், 54. அன்னலட்சுமி மயில்வாகனம் *வாய்ப்பாட்டு, 67. யக்கரையாஸ் தொமாஸ் * வாய்ப்பாட்டு & [C. 75. * வயலின், 2-ம்பகுதி—1-ம் பிரிவு]

2-ம் பிரிவு:

O 5. சுசீலா ஆறுமுகம் வாய்ப்பாட்டு, 7. ஸ்ரீபதியம்பாள் பொன்னுத்துரை வயலின், 10. கந்தையா சுப்பிரமணியம் வாய்ப்பாட்டு, 12, வனஜாட்சி சுப்பையாபிள்ளை வாய்ப்பாட்டு & [N. 27, வயலின், 1-ம் பகுதி 2-ம் பிரிவு], 15. தர்மலட்சுமி லீலாவதி பீதாம்பரம் வாய்ப்பாட்டு, 16. மங்கையர்க்கரசி வல்லிபுரம் வாய்ப்பாட்டு, 19. இரத்தினம்மா பொன்னையா வாய்ப்பாட்டு, 22. நாகரத்தினம் சின்னையா வாய்ப்பாட்டு, 30. திருபதி கந்தரத்தினம் வயலின், 32. நாவுக்கரசி குருசாமி வாய்ப்பாட்டு & (வயலின்—சாதாரண சித்தி), 34. வள்ளிநாயகி தாமோதரம்பிள்ளை வாய்ப்பாட்டு & (வயலின்—சாதாரண சித்தி), 36. மகேஸ்வரி இராசையா வாய்ப்பாட்டு, 37. சத்தியராணி செல்லப்பா வாய்ப்பாட்டு, 40. சகுந்தலாதேவி சண்முகம் வாய்ப்பாட்டு, 42. மகேஸ்வரி சின்னையா வாய்ப்பாட்டு & (வயலின்—சாதாரண சித்தி), 43. லோகநாயகி சின்னப்பு வாய்ப்பாட்டு & வயலின், 47. சுகிர்தராணி நாகமுத்து வாய்ப்பாட்டு, 49. இராஜமணி தம்பிராசா வாய்ப்பாட்டு, 50. யோகேஸ்வரி வடிவேலு வாய்ப்பாட்டு, 55. சற்குணேஸ்வரி சோமசுந்தரம் வாய்ப்பாட்டு, 57. மங்களேஸ்வரி சதாசிவம் வாய்ப்பாட்டு, 58. செல்வராணி செல்வநாயகம் வாய்ப்பாட்டு, 63. கனகம்மா சின்னத்துரை வாய்ப்பாட்டு, 64. கோமதி சோமசுந்தரம் வாய்ப்பாட்டு & வயலின், 65. சரஸ்வதி சங்கரப்பிள்ளை வாய்ப்பாட்டு.

(தொடரும்)

## வரிப்பணம் அறவிடும் சிக்கல்

### 'ஈழகேசரி' ஏற்படுத்திய பரபரப்பு

யாழ்ப்பாணம், 8-2-52.

சாவகச்சேரி வரியிறுப்போர் சங்கத்தின் கூட்டமொன்று சென்ற சனிக்கிழமை பிற்பகல் நடைபெற்றது. சில வட்டாரங்களிலிருந்து அறவிடப்படாத வரிப்பணம் பற்றி விவாதம் நடைபெற்றது. அத்தருணம் வரியிறுப்போர் சங்கத்தின் நோக்கங்களை ஞாபகமூட்டி வரிப்பணம் அறவிடும் விஷயத்தில் மக்கள் எதிர்பார்ப்பதற்கு மாறாகச் சங்கம் நடக்கக்கூடாதெனச் சங்க அங்கத்தவர் ஒருவர் உணர்ச்சியுடன் பேசினார். இதைத் தொடர்ந்து காரசாரமான விவாதம் நடைபெற்றது.

இக் கூட்டத்தின்போது ஈழகேசரியில் அதன் அரசியல நிருபர் எழுதிய கட்டுரை பற்றிய விஷயமும் எழுந்தது. ஈழகேசரி 27-1-52 இதழில வெளியான மக்களை அனுப்பும் பிரதிநிதிகள் என்ற கட்டுரை வரியிறுப்போர் சங்கத்தைக் கண்டித்துக் கேலி செய்திருப்பதாகச் சாவகச்சேரிப் பட்டின சங்கத்தின் உப தலைவரும், தமிழரசுக் கட்சியின் அங்கத்தவரும், வழக்கறிஞருமான திரு. வி. கனகசபை எரிந்து புகைந்தாரெனத் தெரிகின்றது. இதைக்கேட்டு அங்கிருந்த அங்கத்தவர்களில் ஒருவர் எழுந்து தாம் அக் கட்டுரையைப் படித்ததாகவும் அதில் யாவும் உள்ளது உள்ளபடியே நடுநின்று எழுதப்பட்டிருப்பதாகவுந் தெரிவித்தார். இவர் தமிழரசுக்கட்சி அங்கத்தவர்களுள் ஒருவராவார். அத்துடன் வரியிறுப்போர் சங்கத்துச் செயலாளரான திரு. நல்லையா என்பவரும் குறித்த கட்டுரையை ஆதரித்துப் பேசினார் எனத் தெரிகின்றது. அக்கட்டுரையில் வெளியான சில பகுதிகள் யார்யாரைக் குறிப்பிடுகின்றனவோ அவர்கள் அவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டியதே எனக் கூறியிருந்தார். யாருக்குத் தொப்பி அளவாயிருக்கின்றதோ அவரே அதனை அணிய வேண்டியது என அவர் பலத்த சிரிப்பிடையே தெரிவித்தாராம்.

## வலிகாமம் வடக்குத் தமிழ்ப் பாடசாலைகள்

# சிறுவர் இசைக்கலைப் போட்டி

> "மாமனும் மருகனும் கூடி உழுத வயல் கோரை முளையாது"
> என்று வேளாண் மக்கள் ஒரு பழமொழி சொல்லுவார்கள்.

ஒரு சிறு தொகையினரைத் தவிர யாழ்ப்பாணப் பகுதியிற் பிறந்தவர்களுக்குப் பிறந்த இடம் இணுவில் என்பது யாவரும் அறிந்த விஷயம். 'பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனிசிறந்தனவே' என்றிருக்கும்பொழுது இணுவிலைத் தரிசிக்க யாருக்குத்தான் விருப்பமிராது.

இணுவிலம்பதியிலே, சுவர்க்க உலகத்து இந்திரசபா போன்று காட்சியளித்த ஸ்ரீ காளிங்கன் பட மாளிகையிலே அன்றொருநாள் (4-2-52) ஓர் அதிசயத்தைக் கண்டேன். பள்ளிக்கூடங்களிலே பிள்ளைகளை ஆசிரியர்கள் படிப்பிக்கிறார்கள். ஆனால் அங்கே அன்று ஆசிரியர்களை மாணவர்கள் படிப்பித்துக்கொண்டு நின்றார்கள். வலிகாமம் வடக்குத் தமிழ்ப் பாடசாலைகளின் இசைக் கலைப் போட்டியைப் பார்த்தபொழுதுதான் முதலில் இப்படி நினைத்தேன். அத்தோடு இன்னுமொரு தீர்மானமும் செய்துகொண்டேன். அவைகளையே வடபாக வித்தியாதிகாரி திரு. கே. கிருஷ்ண பிள்ளை அவர்கள் கூடத் தமது குறிப்புரையிற் கூறினார். பணக்காரரின் பிள்ளைகளும், விவேகிகளான பிள்ளைகளும் ஆங்கில பாடசாலைகளுக்குச் செல்ல, மிகுதியானோரே தமிழ்ப் பாடசாலைகளில் இருக்கிறார்கள் எனப் பொதுவாகச் சொல்வது எவ்வளவு பெரிய பிழை. ஆங்கில பாடசாலைப் பிள்ளைகள் பந்தடிக்கவும், கடிதம் எழுதவும் படிக்கிறார்களேயன்றிக் காரிய சாத்தியமான கருமம் ஏதுஞ் செய்வார்களோ?

யாழ்ப்பாணத்தவர்களுக்குத் தமிழ் பேசத் தெரியாதென்று சிலர் கூறுவார்கள். ஆனால் அன்றைய பிள்ளைகளின் பேச்சுப் போட்டியைப் பார்த்தால் எத்தனை விதமான பாணிகளில் அவர்களுக்குப் பேசத் தெரியும் என்று அறிந்துகொள்ளலாம்.

யாழ்ப்பாணத்தவர்களுக்குச் சங்கீத ஞானம் பூச்சியம் என வடக்கேயுள்ளவர்கள் சொல்லுவார்கள். இது உண்மை; ஆனால் அன்று நடந்த இசைக் கலைப் போட்டியைக் கேட்டவர்கள் எதிர்காலம் வேறுவிதமாக இருக்குமென்று நிச்சயித்துக் கொள்ளுவார்கள்.

முதலியார் சின்னத்தம்பி அவர்கள் அரசியற் சுதந்திரத்திலும் பார்க்கக் கலைகளின் சுதந்திரமே மேலானது என்று குறிப்பிட்டார்.

இணுவில் மகாஜன வித்தியாசாலைச் சிறுமி — சிறுமியன்று, பால்குடிக்குழந்தை — 'ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே' என்று பாடி அபிநயம் பிடித்ததைக்கண்டு முதலியார் அவர்கள் பெரிதும் வியந்தார். கீழ்ப்பிரிவு இசைக் கலைப் போட்டியில் முதற் பரிசைத் தட்டிக்கொண்டு சென்ற குழந்தை அதுவேயாகும். இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலை 'சின்னஞ் சிறு கிளியே கண்ணம்மா' என்று நடனமாடி இரண்டாமிடத்தைப்பெற்றது. 'தீராத விளையாட்டுப் பிள்ளை' நடனம் குளமங்கால் றோ. க. பாடசாலை நடித்து மூன்றாமிடத்தைப் பெற்றது.

அளவெட்டி சதானந்த வித்தியாசாலையும், உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையும் 'பாப்பாப்பாட்டு' என்னும் விஷயம் பற்றிப் பேசி முறையே முதலாம் இரண்டாம் இடங்களைப் பெற்றனர். இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலை மாணவன் மகாத்மா காந்தி என்னும் விஷயத்தைப்பற்றிப் பேசி மூன்றாம் இடத்தைப் பெற்றான்.

'யாமறிந்த மொழிகளிலே' என்று இராகமாலிகையில் பாடிய ஏழாலை தெற்கு அ. மி. பாடசாலை மாணவி ஒருத்தி சபையோர் எல்லோரையும் கவர்ந்துவிட்டாள். முதலியார் அவர்கள் இந்நிகழ்ச்சியை விசேஷமாக எடுத்துக் குறிப்பிட்டார்கள். வித்தியாதரிசி திரு. சந்திரசேகரம் அவர்கள் தமது பேச்சில் இதுவே எல்லாவற்றிலும் சிறந்த நிகழ்ச்சி என்று குறிப்பிட்டார்.

மேற்பிரிவு இசைக்கலையில் இரண்டாவதாக மயிலணி சைவ வித்தியாசாலையும், மூன்றாவதாக இணுவில் சைவப் பிரகாச வித்தியாசாலையும் நின்றன. மத்தியபிரிவுப் பேச்சில் உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையும், அளவெட்டி சதானந்த வித்தியாசாலையும், தெல்லிப்பழை கிழக்குச் சைவ வித்தியாசாலையும் முறையே முதலாம், இரண்டாம், மூன்றாமிடத்தைப் பெற்றன.

'வெற்றி யெட்டுத்திக்கும் கொட்டுமுரசே' என்று பாடி மயிலணி வித்தியாசாலையும், ஏழாலை தெற்கு அ. மி. பாடசாலையும் மத்தியபிரிவு இசைக் கலையில் வெற்றியடைந்தன. இணுவில் சைவ மகாஜன வித்தியாசாலை இரண்டாம் இடத்தையும், அளவெட்டி சினன்கலட்டி வித்தியாசாலை மூன்றாமிடத்தையும் பெற்றன.

மேற்பிரிவு பேச்சில் அளவெட்டி சதானந்த வித்தியாசாலை முதலிடம் பெற்றது. அளவெட்டி சதானந்த வித்தியாசாலை இவ்விழாவில் பெரும் பங்கு எடுத்துக்கொண்டது என்று வித்தியாதரிசி அவர்கள் தமது குறிப்புரையிற் குறிப்பிட்டார். இரண்டாமிடத்தைத் தெல்லிப்பழை கிழக்குச் சைவ வித்தியாசாலையும், மூன்றாமிடத்தை உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையும் பெற்றன.

இந்நிகழ்ச்சிகள் எல்லாவற்றையும், குழந்தைகளே தொகையாகக் கூடிய, அச்சபை அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்தது. ஆசிரியர்கள் மாத்திரம் ஆங்காங்கே சில இடங்களில் முணுமுணுத்தனர். அப் படமாளிகையின் உள்ளழகும் அச்சபை அழகும் கண்கொள்ளாக் காட்சியாகும். அவர்களின் கீதத்தைக் கேட்டு மின்சார விசிறிகள் கூட ஆடாது அசையாது சித்திரப் பாவைபோல் இருந்தனவென்றால் பாருங்களேன்!

இவைகள் எல்லாவற்றிற்கும் உண்மையான காரண கர்த்தா வித்தியாதரிசி திரு. சந்திரசேகரம் அவர்களே என்று காரியதரிசி திரு. ச. பொன்னுத்துரை குறிப்பிட்டார். 'செயற்கரிய செய்வர் பெரியோர்' என்பதற்கு அவர் இலக்கியமென்பதையும் ஞாபக மூட்டியிருந்தார்.

ஆசிரிய கலாசாலை ஒன்றில் அதிபராயிருந்து, இலங்கையிற் பல பாகங்களிலும் வித்தியாதரிசியாகவிருந்து, வித்தியாதிகாரியாகவிருந்து, இப்பொழுது வடபாக வித்தியாதிகாரியாக இருக்கும் திரு. கே. கிருஷ்ணபிள்ளை அவர்கள் இவ் விழாவிற்குத் தலைமை வகித்தார்கள். அவர்தம் அறிவு ஆற்றல் அனுபவங்களினால் வடபகுதி கல்வித் துறையில் முன்னேறப் போகிறது என்று காரியதரிசி அவர்கள் குறிப்பிட்டார்கள்.

ஆனால் வலிகாமம் வடக்கு விசேஷமாக முன்னேறப்போகிறதென்று நான் விசேஷமாகக் கூறுகிறேன். அதற்கு வித்தியாதரிசி திரு. சந்திரசேகரம் அவர்கள் காரணம் என்று நீங்கள் நினைப்பீர்கள். அதுமாத்திரமல்ல!

ஒரு விசேஷ காரணத்தை அன்று விழாவில் குசுகுசுத்தவர்களிடம் ஒட்டுக் கேட்டு நானறிந்துகொண்டேன். வடபகுதி வித்தியாதிகாரி திரு. கே. கிருஷ்ணபிள்ளை அவர்களின் மருகராம் திரு. சந்திரசேகரம் அவர்கள். "மாமனும் மருகனும் கூடி உழுத வயல் கோரை முளையாது" என்று வேளாண் மக்கள் ஒரு பழமொழி சொல்லுவார்கள்.

பயிர் வளராவிட்டாலும் கோரைமுளையாவிட்டால் அது ஒரு பெருங் காரியமல்லவா? நல்லமரத்தில் புல்லுருவி பாய்ந்தாற் பிறகென்ன? கல்வித்துறையிற் கோரை முளையாதுவிட்டால் அதுவே ஒரு பெரும் அதிர்ஷ்டமல்லவா?

... இரசிகன் ...

## அந்த விருந்து

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கேட்கமுயல்கிறாள். அப்பாடா! அதற்குள் என்ன அவசரம்.

பேச்சு முடிந்து விட்டது. இதற்குள் சாப்பாட்டிற்கு இலை போட்டாய் விட்டது. இருவரும் உள்ளே சாப்பிட வருகின்றனர். பேசப்போனவரின் முகத்தில் ஈயாடவில்லை.

விருந்துக்குப் பின்னர் அம்மாவும் பெண் இருந்த அறைக்குட் போகின்றாள். அவள் முகத்திலும் களையில்லை.

அடுத்த அறைக்குள் அவரும், அவரிடம் எதையோ கேட்க வந்த பெண்ணின் உறவினரும், சிறுவர்களுமாக விருந்தைச் சுவைத்துச் சாப்பிடுகின்றனர்.

உள்ளே வந்த அம்மா, நிராசையோடும், சோகத்தோடும் தன் மகளைப் பார்க்கிறாள். பெண்ணுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. தன் அம்மாவையே வெறித்து வெறித்து நோக்குகிறாள். அம்மா பொறுமையை இழந்தவளாய்த் தன் மகளைக் கட்டிக்கொண்டே "நான் அப்பவே சொன்னேன்" என்கிறாள். இருவருடைய கண்ணீர்த் துளிகளும் ஒன்றாய்க் கலக்கின்றன.

வெளியே சப்புக் கொட்டிக் கொண்டு விருந்துண்ணும் சப்தம்.

அன்று அந்த வீட்டில் எல்லாருமே அவள் பேரைச் சொல்லி விருந்துண்டனர். அவள்மட்டும் கண்ணீர் சொரிந்தாள். அன்றுமட்டுமா, இனி என்றைக்குமே அவள் கண்ணீர் சொரியவேண்டியவளே!

அடுத்த வாரம்

**நூலும் நூற் கயிறும்**

கசின் எழுதும்

சிறு கதை

## காந்திஜீ அமரத்துவ தினம்

மறவன்புலோ இ. மு. சங்கம் பெ. ஆ. சங்கம் என்பவற்றின் ஆதரவில் 29.1.52 காந்திஜீயின் திருவுருவப் படம் சகல வரிசைகளுடன் ஊர்வலமாகக் கொண்டுவரப்பட்டது. மறு நாள் 30.1.52 பிற்பகல் சகலகலாவல்லி வித்தியாசாலையிலே தலைமை ஆசிரியர் திரு. நா. பொன்னம்பலம் அவர்களின் தலைமையிற் பகிரங்கக் கூட்டம் நடைபெற்றது.

தலைவர் தமது முன்னுரையில் இத்தினத்தைக் கொண்டாட வேண்டியதன் அவசியத்தைப் பற்றி விளக்கிக்கூறினார். பின்னர் செல்வி க. நாகம்மா, ஆசிரியர் நா. காங்கேயர், கிராமச்சங்க அங்கத்தவர்; திரு. க. வேலுப்பிள்ளை, ஆசிரியர் திரு. தி. சின்னத்தம்பி, பழைய கிராமாதிகாரி திரு. வே. சரவணமுத்து என்பவர்கள் மகாத்துமாவைப் பற்றியும் அவரால் உலகிற் கேற்பட்ட நன்மைகளைப் பற்றியும் சொற்பொழிவுகளாற்றினர்.

## இசைத்தமிழ் நிலையம்

**உடுவில் சுன்னாகம்**

அடுத்தமாதம் 1-ந் திகதி தொடக்கம் சனி ஞாயிற்றுக்கிழமைகளிலும், விடுமுறை நாட்களிலும் உயர்தர சங்கீதம் கற்க விரும்புபவர்களுக்கும், N. C. O. M. S பரீட்சைகளுக்குப் பிரவேசிப்பவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் முறையே தனித்தனி வகுப்புகள் நடத்த ஏற்பாடு செய்யப்படுகின்றது. இதிற் சேரவிரும்புபவர்கள் உடனே மேற்குறித்தவிலாசத்திற்கு விண்ணப்பிக்குமாறு செயலாளர் தெரிவிக்கின்றார். தகுதியெனக் காணப்படும்மாணவர்களே சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். ஆசிரியர்கள்: வண் சண்முகரத்தினம் அவர்களும் வேறும் தகுதிவாய்ந்தவர்களும்.

## திருமதி எம். எல். வசந்தகுமாரி

சென்னை, திருமதி எம். எல். வசந்தகுமாரி அவர்களுக்குச் சென்ற 28-1-52-ல் ஒரு புத்திரன் பிறந்திருப்பதாகச் செய்தி எட்டியுள்ளது. யாழ்ப்பாணம் தமிழ் விழாவின்போது திருமதி வசந்தகுமாரி அவர்கள் இசைமாரி பொழிந்தமை இங்குகுறிப்பிடத்தக்கது.


## யாழ்ப்பாண ஐக்கிய லாப நிதி

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

**இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம்**

**ரூபா 34,36700. 100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.**

**பங்குப் பணம் கட்டுமுறை:**
மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாதந்தோறும் கட்டப்பட வேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்று வரவு:**
எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமாறு ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்று வரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்:**
க்ஷேமப் பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம் 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்:**
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.

இந்தியா கோட்டுவட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

**கடன்:**
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிருப்பர்

[4514]



## வடமாகாண ஆசிரியர் சகாயநிதிச் சங்கம்

(1933-ம் ஆண்டில் நிறுவப்பட்டது)

அகால மரணமடையும் ஆசிரியரின் குடும்பத்துக்கும், இளைப்பாறும் ஆசிரியருக்கும் உதவி செய்யும் நோக்கமுடைய

**ஒரு ஸ்தாபனம்.**

**30 வயதுக்குட்பட்ட சுயபாஷா ஆங்கில ஆசிரியர் அனைவரும் அங்கத்தவராகச் சேரலாம்.**

**1-1-51-ல் அங்கத்தவர் தொகை 637.**
**1-1-51-ல் கையிருப்பு ரூபா 1,32,603-37.**

1950-ல் இளைப்பாறிய எட்டு ஆசிரியருக்குச் சகாயமாகவும் கட்டணப் பணமாகவும் கொடுக்கப்பட்ட தொகை ரூபா 11,035-39

**அங்கத்தவராகச் சேராதவர்**

**இப்பொழுதே சேரவும்!**

சங்க விதிகள், மனுப்பத்திரம் முதலிய விபரங்களுக்கு பின்வரும் விலாசத்துக்கு எழுதவும்.

காரியதரிசி,
வடமாகாண ஆசிரியர் சகாய நிதிச் சங்கம்,
[4524] 8, பிறவுன் றோட், : : யாழ்ப்பாணம்




**அன்பான மருமக்களே!**

இலங்கை சுதந்திரம் பெற்று நான்கு ஆண்டுகள் முடிவடைந்து விட்டன. இன்று ஐந்தாவது ஆண்டு ஆரம்பித்திருக்கின்றது. 1947-ம் ஆண்டு பெப்ரவரிமாதம் 4-ந்திகதி எமது சொந்த நாடாகிய இலங்கை சுதந்திரம் பெற்றது. சென்ற திங்கட்கிழமை நாங்கள் சுதந்திர தினத்தைக் கொண்டாடினோமல்லவா? சுதந்திர தினத்தை முன்னிட்டுப் பிரதமர் சேனநாயகா அவர்கள் பேசும்போது நாம் அனைவரும் வேற்றுமைகளை அகற்றி ஒற்றுமையாக வாழவேண்டுமென்றார்கள். கடந்த 400 வருட காலமாக அந்நியரின் ஆட்சியில் இலங்கை இருந்து வந்தது. அதனால் உண்டான தீமைகளை 4 வருடத்தில் அகற்ற முடியாது. ஆனபடியால் நாங்கள் ஒன்றுகூடி நின்று தீமைகளை நீக்கவேண்டும். வாழ்க இலங்கை!

கேசரிமாமா

## மாமா பதில்

மே.576 கே. கமலம்; அடேயப்பா! 'பார்சல்' கிடைத்து விட்டதா? அதிஷ்டந்தான்.

கி. 590 பொ. கணேசலிங்கம்; உமது கதை நல்லது. திருத்தமாக எழுதவேண்டும்.

மே. 568 வ. சி. நடராசா; பாவம்! சோமனின்கதி அப்படியாயிற்று. ஆம், உமது ஊரைப்பற்றி எழுதி அனுப்பலாம்.

மே.596 ந. சோமசுந்தரம்; அங்கத்தவராகிவிட்டீர். மகிழ்ச்சிதானே?

மே.593 கு. ஸ்ரீரங்கநாதன்; கிராமத்தைப்பற்றிச் சுருக்கமாக எழுதியிருக்கின்றீர்.

மே. 222 இ. பேரின்பநாயகம்; தெகியோவிற்ற என்ற இடத்தில் ஆசிரியராக இருப்பதையறிந்து ஆனந்தம். ஈழகேசரிமீது உமக்கு அன்பு இருக்கின்றது. நன்றி.

மே: 403 ம. த. லோறன்ஸ்; ஆம், அதிக நாட்களுக்குப் பின்னர் எழுதியிருக்கின்றீர். கட்டுரை கிடைத்தது. திருத்தங்கள் செய்வேன்.

## புதிய மருமக்கள்

கி. 595. க. நாகம்மா; சகலகலாவல்லி வித்தியாசாலை, மறவன்புலோ, சாவகச்சேரி.

மே. 596. ந. சோமசுந்தரம்; ஆடியபாதவீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

மே. 597. வா, அப்துல் லெப்பை; அரசினர் ஆங்கில பாடசாலை, மூதூர்.

## பட்டணம் நல்லது

மே.525
வி. எஸ். பாக்கியநாதன்

இயற்கையன்னை கிராமத்திலே இருக்கிறாள் என்றால் பட்டணத்தில் மட்டும் இல்லையென்ற கருத்துப் பொருந்தாது. இயற்கையன்னையின் அதிசயங்களைப் பட்டணத்திலும் பரக்கக் காணலாம். விஞ்ஞானத்தில் ஏற்பட்ட முன்னேற்றம் சம்பந்தமாகவும் நாகரிகத்தை மக்கள் வரவேற்று வாழ்க்கை நடத்துவதில் உலக அனுபவம் உள்ளவர்கள் என்பது சம்பந்தமாகவும் நாம் பட்டணம் நல்லது என்பதை அறியலாம். வான வில்லின் வடிவையும், சந்திரனின் குளிர்மையையும், நதிகளின் நயம் தரும் ஆரவாரங்களையும் பட்டணத்திற் காணலாம். மகாவலிகங்கை பாயுங் கம்பளை, பேராதனை, கண்டி போன்ற பட்டணங்கள் ஆறுள்ள ஊருக்கு நிரம்பவும் அழகுண்டு என்பதை நிரூபிப்பதுடன், செழிப்புள்ள பட்டணங்களாகவும் திகழ்கின்றன என்பதை நாம் மறக்க முடியுமா?

பிறநாட்டில் இருந்து தேவையான பொருள்கள் நம் நாட்டிற்கு வருகின்றன. அவை கொழும்புப் பட்டணத்திலுள்ள துறைமுகத்திற்கு வந்தால்தான் முறைப்படி எங்கும் பகிர்ந்து கொடுக்க முடியும். பட்டணத்தில் அருமையான இயந்திரங்களைக் காணலாம். அங்கு பிரயாண வசதிகள் உள. விரைவான பாதைகள் இருக்கும். மின்சாரம் விந்தையான பல வேலைகளைச் செய்துகொண்டிருக்கும். இரவையும் பகலாகக் காணலாம். பொழுதை இன்பமாகக் கழிப்பதற்குக் களியாட்ட விழாக்கள் உள.


தம் வாழ்வோடு சம்பந்தப்பட்ட ஒருசில விஷயங்களை நிறைவேற்ற வேண்டுமானால் கிராமத்தவர் பட்டணத்திற்குத்தான் செல்ல வேண்டும். கிராமங்களும் காலக்கிரமத்திற் பட்டணங்களாக மாறி வருகின்றனவேயன்றி, பட்டணங்கள் பலநாளில் படிப்படியாய்க் கிராமமாக மாறிக் கீழ் நோக்கிச் செல்வதில்லை. ஆம், பட்டணம் நல்லது.

## பொழுது புலர்ந்தது!

பொழுது புலர்ந் தது பொழுது,
போய்க் கடமை முடிக்க வேண்டும்,
முடித்துப் பாடம் படிக்க வேண்டும்,
படித்துப் பள்ளிக்குச் செல்ல வேண்டும்,
சென்று சொல்வதைக் கேட்க வேண்டும்,
கேட்டுச் சொற்படி நடக்க வேண்டும்,
நடந்து நல்லபேர் எடுக்க வேண்டும்—
நடந்து நல்லபேர் எடுக்க வேண்டும்!,

— திருநாவன்

மிருகங்களும் பறவைகளும் 5



## யானை

மே.523 நா. சோமசுந்தரம்

யானை தாவரமுண்ணும் ஒரு மாபெரும் மிருகம். மிருகவினங்க ளெல்லாவற்றுள்ளும் மிகப் பெரிய இனம் யானை என்றே கூறலாம். மதம் பிடித்த யானைகள் என்றால் காட்டிலுள்ள மரங் தடிகளையெல்லாம் அதம் செய்துகொண்டு மூர்க்கமாகத் திரியும். யானைகளைப் பிடித்து வீட்டிற் கட்டி வேலை செய்விக்கின்றார்கள். மனிதரால் செய்யக்கூட முடியாத பல கஷ்டமான வேலைகளை யானைகள் செய்கின்றன.

யானை ஞாபக சக்தியிற் சிறந்தது. ஒருவன் எவ்வளவு காலத்துக்குமுன் தீமை செய்தாலும் அது அதனை மனத்தில் வைத்திருக்கும். அதேபோல நல்ல செய்கைகளையும் ஞாபகத்தில் வைத்திருக்கும். பழிக்குப் பழி வாங்கும் யானையுடன் சாக்கிரதையாக நடந்துகொள்ளவேண்டும்.

மாணவர்களாகிய நாங்கள், ஆசிரியர்கள் வகுப்பிலே படிப்பித்த பாடங்களைக் கேட்கும் பொழுது அது ஞாபகத்திற்கு வாராதாயின் தலையைச் சொறிகிறோம். நேற்று நிகழ்ந்த நிகழ்ச்சி கூட மனத் திரையில் நின்று மறைந்து விடுகிறது. ஆனால்.... யானையோ பத்து, இருபது வருடஞ் சென்றாலும் ஒருவன் தனக்குச் செய்த செயல்களை மறப்பதேயில்லை.

மிருகமாகிய அந்த யானையிடமிருக்கும் ஞாபகசக்தி மனித சமூகத்துக்குத் தாராளமாய்க் கிடைக்கப் பெற்றால் எவ்வளவோ நன்மை வந்தடையும்.

## பிறந்ததின வாழ்த்துக்கள்
### 10-2-52—16-2-52

கி.168. அ. பாலசுப்பிரமணியம்; மே.195. இ. இராசரத்தினம்; கி.207. வை. சிவகாமசௌந்தரி; மே.217 லூ. அந்தோனியாள்; கி.239 மா. ஜெகதீஸ்வரி; கி.340. கே. சொக்கலிங்கம்; மே.428. ப. இராஜலட்சுமி; மே.451. பி. எஸ். கோவிந்தராஜன்; மே.454. கே. ராஜகோபால்; மே.531. ஆ. நவரத்தினம்; மே.554. ஆர். டி. பேபிநோனா; மே.552. ஏ. டி. ஆரியதாச; மே.554. எச். டி. ஹேமாவதி; மே.587. மு. ஆலாலசுந்தரம்.

மேற்குறித்த எனது மருமக்கள இன்றுபோல் இனனும் பலலாண்டு வாழ்வார்களாக.

## மன்னரின் பிரிவு

இங்கிலாந்து மன்னர் ஆறும் ஜோர்ஜ் அவர்கள் சென்ற புதன்கிழமை (6-2-52) இவ்வுலகை விட்டுப் பிரிந்துவிட்டார். அன்று படுக்கைக்குச் சென்றவர் பின்னர் எழுந்ததேயில்லை.



சந்தா விபரம்

ஆண்டுச் சந்தா :
இலங்கை-இந்தியா ரூ. 6-00
மலாயா — $ 6-00
தனிப்பிரதி சதம் 1 . காசு 10

The EeLAKESARI
T'Phone No. 805
NATIONALIST TAMIL WEEKLY
Largest circulation in Ceylon, India, Burma & Malayan Union
Founder: N. PONNIAH

Vol. 22 | Chunnakam, Sunday, Feb. 10, 1952 | No. 30

# காந்தியமே கதிமோட்சம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யாவிடின், ஒருபோதும் அவர்கட்குத் தலைமைவகிக்க இணங்கமாட்டார். புறத்தே விலகிநிற்பர். அவர்கள் அறியாமையைத் துணையாகக் கொண்டு தாம் தலைமைவகிக்கக் கனவிலுங் கருதார்.

சுதந்திரப் போரினை நடத்தியபோது எத்தனையோ முறை இவரது இயக்கங்கள் தடைதாமதங்களை அடைந்ததுண்டு. அப்போதெல்லாம் ஏற்பட்ட தவறுகட்கெல்லாம் தாமே காரணமென்று கூறி எல்லாத் தவறுகளையும் தமது தலைமீது சுமத்திக் கொண்டனர். மற்றையோர் மீது எவ்வித பழியையுஞ் சூட்டினாரில்லை. இவ்வாறாக அறநெறி நின்று சத்தியத்தை உயிராக ஓம்பிய இன்னொருவரை இந்தியாவிலன்றி வேறெங்கு காண்பது? தம்மை மற்றவர்கள் புகழ்ந்து துதித்தாலும், அல்லது இகழ்ந்து தூஷித்தாலும் அவர்கள் மீது விருப்பாவது வெறுப்பாவது கொள்ளாதவர். சேர்ச்சில் துரை எத்தனை முறையாக இவரைக் கடிந்தனர். முகமத் அலி ஜின்னா இவரை எத்தனை முறை அவமதித்து ஒதுக்கினர். எதற்கும் சிந்தை கலங்கினாரல்லர். எதிர்த்து வாது தொடுத்தாரல்லர். உண்மையை நிலைநாட்டிச் சென்றனர். கடமையைச் செய்து திருப்தியடையும் கர்மயோகியின் நிலை வேறுயாது? உண்மை வாதிக்குத் தோல்வி எதிலும் எப்போதும் இல்லையே.

காந்தியடிகள் திருத்தங்களை மாற்றங்களை விரும்பாதவரல்லர். பழமையில் முற்றாக ஆழ்ந்து நின்றவரல்லர்; காலத்துக்கும் சந்தர்ப்பத்துக்கு மேற்ப அவசிய திருத்தங்களை விசுவாசத்துடன் பன்முறையும் ஏற்றதுண்டு. ஆனால் அடிப்படையான கொள்கைகளை, உயிர்நாடி போன்ற இலட்சியங்களை, கைவிட மாட்டார். பெரிய இந்திய நாட்டில், பல்கோடி மக்கட்கிடையில், பலதிறப்பட்ட பேதங்களும் சாதிமத பிரிவுகளும், நிறைந்த நாட்டில் இவர் தமது சத்தியாக்கிரகப் போரை நடத்தி வெற்றியடைந்தது பெரிய அற்புதச் செயலாகவே கருதப்படவேண்டும். இவரின் ஆத்மசக்தியின் திறமை அப்போது தான் விளங்கக் கூடியதாகும். தாம் மாத்திரமன்றித் தம்முடன் நெருங்கிக் கலந்துழைத்த தொண்டர்களையும் களங்கமற்றவர்களாக்கி சன்மார்க்கத்தில் வாழ வைத்தனர். நாட்டினை நலித்துவரும் வறுமையை ஒழிக்க, சாதி சமய வேற்றுமைகளைக் களைய, உண்மையான சிக்கனவாழ்வை நிலைநாட்ட, இவர் ஆற்றிய பணிகள் இம்மாத்திரமா? இந்தியா சுதந்திரமடைந்தவுடன் தனது கடமை முடிவடைந்து விட்டதென இவர் கருதினதில்லை.

உலகமக்கள் சமாதானமாக வாழவேண்டும். பசிப்பிணியால் துன்புறாதிருக்க வழி காணவேண்டும் என்று கருதி அவைகளைப் பெற வழிகள் எடுத்துரைத்து வந்தனர். ஆனால் முற்றாகச் சுயநலத்தில் ஆழ்ந்து உலக இன்பங்களில் மாண்டுகொண்டிருக்கும் உலகம் அவரது பொன்மொழிகளை, அனுட்டானத்தில் தெளிவாகக் காட்டிய வழிகளை முற்றாக நம்பி ஏற்கவில்லை. மகாத்மா போதித்து வந்த சத்தியாக்கிரக வழியே உலகில் யுத்தத்தைத் தடுக்கும், சமாதானத்தை நிரந்தரமாக நிலைநாட்டுமென்று கொள்ளவில்லை. அப்படிக் கொண்டிருப்பின் ஒருமுறையாவது இவருக்கு நோபல் சமாதானப் பரிசு கிடைத்திருக்கும். முதலாவது யுத்தம் முடிந்தவுடன் சர்வதேச சங்கம் மிக்க ஆரவாரத்துடன் தோன்றிச் சமாதானத்தை நாட்ட முயன்றது. ஆனால் ஒன்றும் வாய்க்கவில்லை. முதலாவது உலக யுத்தம் முடிவடைந்து 20 வருடங்கட்குள் இரண்டாவது யுத்தம் ஆரம்பித்தது. அதனால் ஏற்பட்ட துயர்கள், நட்டங்கள், கஷ்டங்கள் அனந்தம். இப்போது ஐக்கியநாடுகள் சங்கம் நிரந்தர சமாதானத்தை நிலை நாட்டச் செய்து வரும் அரும் பெரும் முயற்சி இம்மாத்திரமன்று. உலகப் போக்கினை நோக்குமிடத்து இச்சங்கத்தின் அரிய முயற்சி நற்பலனைக் கொண்டு வரும் என்று சொல்லவியலாது. மூன்றாவது உலகமகா யுத்தம் ஆரம்பிக்கும் நாள் இன்றைக்கோ நாளைக்கோ வென்று அஞ்சவேண்டியிருக்கிறது. யுத்தக் கூச்சலை என்றுங் கேட்டுக்கொண்டிருக்கின்றோம். எனவே மேலைத்தேச வல்லரசினரின் சமாதான முயற்சியெல்லாம் விரும்பிய பயனை யளியாது போவதைக் காண்கின்றோம். உலக முய்வடைய வேண்டின், நிரந்தர சமாதானம் நன்கு நிலைபெற வேண்டின், காந்தியடிகள்காட்டிய வழியையே உலகம் மேற்கொள்ளவேண்டும். உண்மையையும் அஹிம்சையையும் மேற்கொண்டு சத்தியாக்கிரக வழியை அனுட்டித்தாற்றான் உலகம் முற்றாக யுத்தத்தைத் தடுக்க இயலும். வல்லரசினர் பிழைவழிச் சென்று பன்முறை படுதோல்வியடைந்தும் மறுபடியும் அந்த வழியையே கைக்கொண்டு செல்கின்றனர். ஆகவே, காந்தியடிகள் காட்டிய வழியன்றி இந்தப்பெரிய உலகத்துக்கு மீட்சியை உண்டாக்கும் வழி யாதுமிலது. இதை என்று உலகவல்லரசினர் உணர்கின்றனரோ அன்றுதான் உலகத்துக்கு உய்வுண்டு.

## புத்தகக் காட்சி

யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரியில் 9-2-52 மாலை 2-30-க்குப் புத்தகக் காட்சியொன்று நடைபெறும். அன்று காலை 11.30 க்கு நடைபெறும் மகாநாட்டில் ஆங்கிலப் பேராசிரியர் வில்வி அவர்கள் பங்குபற்றி ஆசிரியர்களையும் சந்தித்துப் பேசுவார்கள்.




இப் பத்திரிகையில் வெளியாகும் ஹாஸ்யக் கட்டுரைகள், கதைகளில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.

## ORDER NISI

IN THE DISTRICT COURT OF JAFFNA

Testamentary Jurisdiction } No. 1375

In the matter of the intestate estate of the late Rasammah wife of Vinasithamby Ratnam of Erlalai. *Deceased*

Vinasithamby Ratnam of Erlalai presently of Kadduvan *Petitioner*

Vs.

1. Sarathadevi daughter of Ratnam.
2. Arunakirinathan son of Ratnam.
3. Annapillai widow of Sinniah all of Erlalai, the 1st two presently of Kadduvan

*Respondents*

This matter coming on for disposal before V. S. Jayawickreme, Esquire, District Judge of Jaffna, on the 22nd day of October, 1951, in the presence of Mr. K. Kanapathipillai, Proctor, on the part of the petitioner and the affidavit of the petitioner dated 14th day of October, 1951, having been read:

It is ordered that the abovenamed 3rd respondent be appointed guardian ad litem over the minors the 1st and 2nd respondents and that the petitioner be declared entitled to have letters of administration over the estate of the abovenamed deceased and the same issued to him accordingly unless the respondents or any others interested shall on or before the 17th day of December, 1951, appear before this Court and show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

And it is further ordered that the petitioner do produce the said minors in Court on the said date.

(Sgd.) **V. S. Jayawickrema**
District Judge

Drawn by
K. Kanapathipillai (*Sgd.*)
Proctor for Petitioner
17-12-51

Time to show cause extended to 25-1-52.

**W. M. Gunam Spencer** (Sgd.)
District Judge

Time to show cause extended to 18-2-52.

**K. D. de Silva** (Sgd.)
District Judge.

[4526—ii]

## பேராதனையிற் சுதந்திரதின விழா

பேராதனை அரசினர் தமிழ்ப் பாடசாலைப் பெற்றூர் ஆசிரியர் சங்கத்தின் சார்பில், இலங்கையின் ஐந்தாவது சுதந்திரதின விழா 4-2-52 காலை விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. சமூகமளித்த அனைவருக்கும் அறுசுவையுடன் அன்னமளிக்கப்பட்டது. தலைமையாசிரியர் விழாவை நடாத்த உதவியோரனைவருக்கும் சங்கத்தின் சார்பாக நன்றியுரை கூறினர்.

## காந்தியடிகள் நினைவு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

டார். காந்தியடிகளின் வாழ்க்கையிற் கண்ட பெரிய தத்துவங்களைப் பற்றிப் பண்டிதை செ. இராசலட்சுமி அம்மாள், திருவாளர் காந்தி உபாத்தியாயர் பொ. கந்தையா, திரு. எம். எல். வல்தாரிஸ், இந்அக்கல்லூரி அதிபர் திரு. பொ. இரகுபதி பி. ஏ. முதலியோர் குறிப்புரைகள் கூறினர். சங்கச்செயலாளர் திரு. கோ. இராஜகோபால் அவர்கள் நன்றியுரையுடன் விழா நிறைவேறியது.

இப்பத்திரிகை, இதன் சொந்தக்காரருக்காக, யாழ்ப்பாணம்— குரும்பசிட்டி, முத்தையா—சபாரத்தினம் அவர்களால் சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தில் 1952-ம் ஆண்டு பெப்ரவரி மீ 10-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.